தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## கோமாரி நோய்: கால்நடைகளுக்கு மார்ச் மாதம் தடுப்பூசி: அமைச்சர் சின்னையா

**சென்னை,**

கோமாரி உள்ளிட்ட நோய்கள் தாக்காமல் இருக்க, கால்நடைகளுக்கு மார்ச் மாதம் தடுப்பூசி போடப்பட உள்ளதாக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா தெரிவித்தார்.சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை மீது செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தின் மீது தேமுதிக கொறடா வி.சி. சந்திரகுமாரின் பேச்சுக்கு அவர் அளித்த விளக்கம்:

கடந்த அக்டோபர்-நவம்பர் மாதத்தில் ஏற்காடு இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்த சமயத்தில் கோமாரி நோய் தாக்குதல் குறித்த செய்திகள் எதிர்க்கட்சியினரால் பெரிதுபடுத்தப்பட்டன. விவசாயிகள் யாரும் போராடவில்லை.கோமாரி நோயால் 30 ஆயிரம் கால்நடைகள் பாதிக்கப்பட்டது உண்மை. ஆனால், கடந்த டிசம்பருக்குள் அந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. தடுப்பூசி போடப்படாத ஆயிரத்து 124 மாடுகள் இறந்துள்ளன.தொற்று நோய்கள் தாக்காமல் இருக்க கால்நடைகளுக்கு வரும் மார்ச் மாதத்தில் தடுப்பூசிகள் போடப்படும் என்றார் அமைச்சர் சின்னையா.

## வெங்கலராஜன் கோட்டை சானலில் 47 ஆண்டுகளுக்குப் பின்னர் தண்ணீர் திறப்பு

**கன்னியாகுமரி,**

காமராஜர் ஆட்சி காலத்தில் விவசாயத்துக்காக அமைக்கப்பட்ட வெண்கலராஜன் கோட்டை சானல் முழுமையாக சீரமைக்கப்பட்டு 47 ஆண்டுகளுக்குப் பின்னர் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதற்கான சோதனை ஓட்டத்தை அமைச்சர் பச்சைமால் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். தென்தாமரைகுளம் சுற்று

வட்டாரப் பகுதி மக்களின் விவசாயத்துக்காகவும், குடிநீர் பிரச்னையைத் தீர்க்கும் வகையிலும் 1964-ஆம் ஆண்டு காமராஜர் ஆட்சி காலத்தில் வெண்கலராஜன் கோட்டை சானல் திட்டம் கொண்டு வரப்பட்டது. நாஞ்சில் நாடு புத்தனாறு கால்வாய் மூலம் இச்சானலில் தண்ணீர் கொண்டு வருவது திட்டமாகும்.இச்சானல் பொற்றையடியில் இருந்து கோட்டையடி வரை தரைமட்டத்துக்குக் கீழேயும், சோட்டப்பணிக்கன் தேரிவிளையில் இருந்து சித்தன்குடியிருப்பு வரை தரைமட்டத்துக்கு மேல் பாலம் அமைக்கப்பட்டும், சித்தன்குடியிருப்பில் இருந்து எட்டுக்கூட்டு தேரிவிளை வரை தரைமட்டத்திலும் செல்கிறது.

காமராஜரின் கனவுத் திட்டமாக வர்ணிக்கப்பட்ட இது பொற்றையடியில் இருந்து இலந்தையடிவிளை தலக்குளத்தை சென்றடைய வேண்டும். ஆனால் 3 ஆண்டுகள் சானல் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் 1967-ல் சோட்டப்பணிக்கன் தேரிவிளை பகுதியோடு பணி பாதியில் நிறுத்தப்பட்டது. இதனால் சானல் வழியாக எடுக்கூட்டு தேரிவிளை பகுதி வரை தண்ணீர் விடப்பட்டு வந்தது.இந்நிலையில் சானல் சரிவர பராமரிப்பு செய்யப்படாததால் பல இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டு சேதமடைந்தது. இதன் காரணமாக இப்பகுதியில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு உப்புநீராக மாறியது. இதையடுத்து சானலில் ஏற்பட்ட உடைப்புகள் சரிசெய்யப்படுவதுடன், தடைபட்டுள்ள சோட்டப்பணிக்கன் தேரிவிளை பகுதியில் இருந்து தலக்குளம் வரை சானலை நீட்டிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று ரூ. 1 கோடியே 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து புதிதாக சானல் அமைக்கும் பணி கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தது.

தற்போது தலக்குளம் வரை பணிகள் முழுமையாக நிறைவடைந்த நிலையில், சானலில் சோதனை முயற்சியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கே.டி. பச்சைமால் தண்ணீரை திறந்து வைத்தார். இதனால் தலக்குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள தென்னை, வாழை, நெல் உள்ளிட்ட 300 ஏக்கர் பயிர்கள் பாசன வசதியைப் பெறும். 1964-ல் ஆரம்பிக்கப்பட்டு 1967-ல்

தடைபட்ட திட்டம் 47 ஆண்டுகளுக்குப் பின்னர் 2014-ல் நிறைவடைந்துள்ளதால் இப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து தென்தாமரைகுளம் பேரூராட்சித் தலைவர் எஸ். பாலச்சந்திரன் கூறியதாவது: காமராஜர் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்டு, இடையில் தடைபட்ட இத்திட்டம் முதல்வர் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று காமராஜரின் கனவுத் திட்டத்தை நிறைவேற்றிய தமிழக முதல்வருக்கு தென்தாமரைகுளம் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் அவர்.

## 21-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**மதுரை,**

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (பிப்.21) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தலைமையில், ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறும் இக் கூட்டத்தில் விவசாயம் தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர்.

விவசாயம் தொடர்புடைய தனிநபர் பிரச்னையாக இருப்பின் கோரிக்கைகளை மனுக்களாக ஆட்சியரிடம் நேரடியாக வழங்கலாம். பொதுப் பிரச்னையாக இருப்பின் மன்றத்தில் தெரிவிக்கலாம்.

ஆகவே, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக் கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம் என ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## முட்டைக்கோஸ் விலை கடும் வீழ்ச்சி

**சத்தியமங்கலம்,**

முட்டைக்கோஸ் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால் தாளவாடி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தாளவாடி மலைப்பகுதி, கடல் மட்டத்திலிருந்து சுமார்

1,105 மீட்டர் உயரத்தில் உள்ளது. இப் பகுதியில் குளிர்ந்த தட்பவெப்ப நிலை நிலவுவதால், மலைப் பயிரான முட்டைக்கோஸ் இங்கு சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் முட்டைக்கோப்ஸ மேட்டுப்பாளையம், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் கேரள மாநில வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

கீரை வகையைச் சேர்ந்த மூன்று காலப் பயிரான முட்டைக்கோப்ஸ நடவு செய்த போது கிலோ ரூ.10 முதல் 12 வரை விற்பனையானது. இதனால், பெரும்பாலான விவசாயிகளுக்கு முட்டைக்கோஸ் பயிரிடும் ஆர்வம் ஏற்பட்டு கணேஸ், நீலகிரி, சாண்டோஸ் மற்றும் போலோ போன்ற ரகங்களைப் பயிரிட்டனர். தற்போது, அறுவடைக்குத் தயாரான நிலையில் உற்பத்தி பலமடங்காக அதிகரித்து விட்டதால் போதிய விலை கிடைக்கவில்லை. மேலும், கர்நாடகத்தில் இருந்து முட்டைக்கோஸ் வரத்து அதிகமானதால் மேட்டுப்பாளையம் காய்கறி மண்டியில் இதன் விலை சரிந்தது. வறட்சியான சூழலில் முட்டைக்கோஸ் சாகுபடி செய்த விவசாயிகளுக்குப் போதிய விலை கிடைக்காததால் தாளவாடி வட்டார விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, தாளவாடியைச் சேர்ந்த மதேவப்பா கூறியது:

ஆசனூர் முதல் தாளவாடி கர்நாடக எல்லை வரை முட்டைக்கோஸ் சாகுபடி செய்யப்படுகிறது. நல்ல வளமான நிலத்தில் ஏக்கருக்கு 20 டன்னும், பெரும்பாலானமானாவாரி நிலத்தில் 10 டன்னும் மகசூல் கிடைக்கிறது. முட்டைக்கோஸ் வரத்தும் அதிகரித்துவிட்டதால் வியாபாரிகள் தோட்டத்துக்கு வந்து கிலோ ரூ.3-க்கு கொள்முதல் செய்கின்றனர். சில மாதங்களுக்கு முன் இதன் விலை கிலோ ரூ.12 ஆக இருந்தது. தோட்டத்தில் இருந்து மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிக்கு எடுத்துச் செல்லும் லாரி வாடகை, ஏற்றுக்கூலி, இறக்கு கூலி, மண்டி கமிஷன் என அனைத்துச் செலவுகளையும் கணக்கிட்டால் கிலோவுக்கு ஒரு ரூபாய் மட்டுமே மிஞ்சுகிறது. சாகுபடி காலத்தில் மூன்று முறை உரமிட்டு, 12 வாரங்கள் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து, அதன் பிறகு அறுவடைக்கூலி எனக்

கணக்கிட்டால் ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை செலவாகிறது.இருப்பினும், கோஸ் விலை உயரும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறோம் என்றார்.

**மாவட்டத்தில் பரவலாக திடீர் சாரல் மழை**

**உதகை,**

நீலகிரி மாவட்டத்தில் திங்கள்கிழமை நள்ளிரவிலிருந்து திடீரெனப் பெய்த பரவலான சாரல் மழையால் பொது மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான நீர்த்தேக்கங்களில் தண்ணீர் வெகுவாக குறைந்துள்ளதால் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேபோல, விவசாய நிலங்களில் தண்ணீர் பாய்ச்ச வழியின்றி விவசாயிகளும் அவதியுற்று வந்தனர். பிப்ரவரி மாதம் முடிவடையவுள்ள சூழலிலும் உதகை மற்றும் சுற்றுப் பகுதிகளில் பனிப்பொழிவு இருந்து வருகிறது.

இந் நிலையில், திங்கள்கிழமை நள்ளிரவிலிருந்து மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. திடீரென பெய்யத் தொடங்கிய மழை, செவ்வாய்க்கிழமை பகலிலும் நீடித்தது. மழையுடன் கடுமையான மேகமூட்டமும் காணப்பட்டது. இதனால், வாகனங்களை இயக்குவதில் பெரும் சிரமம் ஏற்பட்டது.  மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 267 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதிகளவாக பர்லியாரில் 68 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. பிற பகுதிகளில் பதிவான மழை விவரம்: (அளவு மில்லி மீட்டரில்): கிண்ணக்கொரை-40, குன்னூர்-38, கோத்தகிரி-34, கேத்தி-27.2, கெத்தை-25, குந்தா-16, கொடநாடு-12, அவலாஞ்சி-4 மற்றும் உதகை-3 மி.மீ.

மாவட்டத்தில் திடீரெனப் பெய்த மழை காரணமாக பல்வேறு பகுதிகளிலும் தண்ணீர் ஊற்றுகள் மீண்டும் சுரக்க வாய்ப்புள்ளது. இதனால், பொது மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதேபோல, விவசாயத்திற்கும் இந்த மழை ஓரளவு உதவியுள்ளதால் விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**யூகலிப்டஸ், பைன் மரங்கள் இல்லாத நீலகிரியை உருவாக்கத் திட்டம்**

**உதகை,**

நீலகிரி மலை என்றாலே உயரமான யூகலிப்டஸ் மரங்களும், பைன் மரங்களும், சீகை மரங்களும்தான் நினைவுக்கு வரும்.

ஆனால், இந்த வகை மரங்களே இல்லாத காட்சியை நினைத்துப் பார்க்க முடியுமா?. முடியும் என்கின்றனர் வனத் துறையினர். இதற்காக திட்டமிடுவதற்காகவும், நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் முதல்வர் ஜெயலலிதா 5 ஆண்டுகளுக்கு ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு அளித்துள்ளார். இதுதொடர்பான நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டுள்ளன.

யூகலிப்டஸ் வளர்ந்த கதை

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் யூகலிப்டஸ், சீகை, பைன், லெண்டானா, கரிக்கட்டான், பன்றி முள், கோத்தகிரி மெலார் ஆகியவை களைத் தாவரங்களாக கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றை முற்றிலுமாக நீலகிரியிலிருந்து அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக, சோலை மரக்கன்றுகளை நடவு செய்வதே அரசின் திட்டம். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நீலகிரி மலைப் பகுதியில் பெரும்பாலான இடங்கள் சதுப்பு நிலங்களாகவே இருந்தன. இதனால், ஆங்காங்கே ஊற்றுகள் தோன்றி வற்றாத நதிகளாக ஆறுகள் இருந்தன. ஆங்கிலேயர்கள் நீலகிரிக்கு வந்தபோது இந்த சதுப்பு நிலப் பகுதிகள் அவர்களுக்கு இடையூறாக இருந்ததால் நிலத்தடி நீரை வேகமாக உறிஞ்சிவிடும் தன்மைகொண்ட யூகலிப்டஸ் மரங்களை ஆஸ்திரேலியாவில் இருந்து நீலகிரிக்கு கொண்டு வந்து நட்டுள்ளனர்.

நிலத்தடி நீர்மட்டம் பாதிப்பு

அதேபோல, நீலகிரியின் விறகுத் தேவைக்காகவும், கூழ்மரத்தின் தேவைகளுக்காகவும், வனப்பரப்பை அதிகரிக்கும் வகையிலும் ஹெலிகாப்டரில் இருந்து சீகை மரத்தின் விதைகள் தூவப்பட்டன. இவையும், மனிதர்கள் புகமுடியாத இடங்களிலெல்லாம் செழித்து வளர்ந்துவிட்டன. அதேபோல, பைன்

மரங்களும் நீலகிரியில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆங்காங்கே பைன் மரக்காடுகளும் உள்ளன. ஆனால், இவற்றால் நீராதாரம் குறைவதோடு, நிலத்தடி நீர்மட்டமும் வேகமாக குறைந்து வருவதால் இந்த மரங்களையெல்லாம் களை மரங்கள் என தற்போது அறிவித்துள்ளனர்.

அகற்ற வேண்டியது அவசியம்

நீலகிரி மாவட்டத்தில் தற்போது சுமார் 70 சதவீத வனப்பரப்பு உள்ளது. இதில், குறிப்பாக தெற்கு வனக்கோட்டத்தில் மட்டும் மொத்தமுள்ள 32,000 ஹெக்டேர் பரப்பளவில் 16,000 ஹெக்டேரில் இத்தகைய மர வகைகள் உள்ளன. தெற்கு வனக் கோட்டத்தில் உற்பத்தியாகும் தண்ணீர்தான் தமிழகம் மட்டுமின்றி கேரளம், கர்நாடகத்தில் 12-க்கும் மேற்பட்ட மாவட்டங்களின் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக உள்ளது. இங்குதோன்றும் பவானி மற்றும் மோயார் நதிகள் வற்றாத நதிகளாக ஓடிக் கொண்டிருக்கின்றன. எனவே, நீராதாரங்களைப் பாதுகாக்கும் வகையில் களை மரங்களை அகற்ற வேண்டியது அவசியம் என்கிறார் நீலகிரி தெற்கு வனக்கோட்ட அலுவலர் பத்ரசாமி.

மீண்டும் சோலை மரக்காடுகள்

1940-க்குப் பிறகுதான் நீலகிரி மலையில் இயற்கைச் சோலை மரங்கள் குறைந்து களை மரங்களின் ஆதிக்கம் தொடங்கியதாகவும், இதனால் சோலைக் காடுகளும், புல்வெளிகளும்கூட பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாகவே உணவுத் தேவைக்காக வன விலங்குகள் வனத்தைவிட்டு வெளியே வரும் நிகழ்வுகளும் தொடங்கியிருப்பதாக கூறும் வன அலுவலர், இத்தகைய பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையிலேயே களை மரங்களை அகற்றி மீண்டும் சோலை மரக்காடுகளை உருவாக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆலோசனைக் கருத்தரங்கம்

முதல்வர் அறிவித்துள்ள இப்புதிய திட்டத்தைச் செயல்படுத்த ஆலோசனைகளை கேட்கும் வகையில் உதகையில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. கோவை மண்டல வனப் பாதுகாவலர் வி.டி.கந்தசாமி தலைமையில் நடத்தப்பட்ட இக் கருத்தரங்கில்,

டான்டீ நிர்வாக இயக்குநர் டாக்டர் பாலாஜி, மாவட்ட வன அலுவலர்கள் சுகிர்தராஜ் கோயில்பிள்ளை, பத்ரசாமி, கோவை பாரதியார் பல்கலைக்கழக தாவரவியல் துறைப் பேராசிரியர் டாக்டர் வி.எஸ்.ராமச்சந்திரன், வயநாடு மாவட்டம் குருகுலம் தாவரவியல் காப்பகத்தில் இருந்து சுப்ரபா சேஷன், கோவை சேகான் அமைப்பின் டாக்டர் பாலசுப்ரமணியன், மத்திய அரசின் எமரால்டு மூலிகைப் பண்ணைத் தலைவர் டாக்டர் எஸ்.ராஜன், உதகை அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் டாக்டர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

விரைவில் களையெடுப்பு

இவர்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேவையான மாற்றங்களுக்குப் பின்னர் அரசின் ஒப்புதல் கிடைத்ததும் களை மரங்களை அகற்றும் பணி விரைவில் தொடங்கப்படும். மொத்தத்தில் அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர் நீலகிரி மலையில் யூகலிப்டஸ், பைன், சீகை போன்ற மரங்கள் அரிதாகவே காணப்படும் என்பது உறுதி.

**வேளாண் அலுவலர்களுக்கான பயிற்சி**

**தண்டராம்பட்டு,**

மத்திய அரசின் முதன்மை செயலக உதவி செயலாளர்களுக்கு வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி ஒரு நாள் பயிற்சி திங்கள் கிழமை அளிக்கப்பட்டது. 15 பேர் கொண்ட இக்குழுவுக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.பன்னீர்செல்வம் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் பயிற்சி அளித்தார். இப்பயிற்சியின் ஒரு பகுதியாக தண்டராம்பட்டு பகுதியிலுள்ள விவசாயத்திட்டங்கள் செயல்படுத்திய வயல்களை பார்வையிட்டனர் (படம்).

மலமஞ்சனூர் கிராமத்தில் ஒருங்கிணைந்த பண்ணை வயலையும், கொளமஞ்சனூர் கிராமத்தில் திருந்திய கரும்பு வயலையும், கீழ்ராவந்தவாடி பந்தல் காய்கறி தோட்டத்தையும் பார்வையிட்டனர். பார்வையின் போது தண்டராம்பட்டு வேளாண்மை உதவி இயக்குநர் பாலா, வேளாண் ஆய்வாளர்கள் நடராஜன்,

முத்துராமன், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) ஜெகநாதன், ரமேஷ், பாண்டு ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் குறித்த செயல்விளக்கம்**

**ராசிபுரம்,**

நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் பொறியியல் துறை சார்பில், வேளாண் கருவிகள் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கமளிக்கப்பட்டது.

அரியாகவுண்டம்பட்டி கொங்களம்மன் கோயில் வளாகத்தில் நடைபெற்ற இந்தச் செயல்விளக்க முகாமில் நாமக்கல் வேளாண்மை பொறியியல் துறை உதவிச்

செயற்பொறியாளர் பி.கே.பார்த்திபன் தலைமை வகித்தார். இதில், சுமார் 20 விவசாயிகள் பங்கேற்றுப் பயிற்சி பெற்றனர்.

நாமக்கல் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் எஸ்.அழகுதுரை, மகேந்திரா நிறுவனம் சார்பில் வேல்முருகன் ஆகியோர் பங்கேற்று, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

பின்னர், வயல்வெளியில் இயந்திரங்கள், மினி டிராக்டர்களை இயக்கிப் பயிற்சி பெற்றனர்.இதேபோல, கே.எல்.எண்டர்பிரைசஸ் நிறுவனம் சார்பில், வயல்வெளி டிராலி ஸ்ப்ரேயர், பவர் ஸ்ப்ரேயர், மின்சார தெளிப்பான், மரக் கிளைகளை வெட்டும் கருவி ஆகியவை குறித்து செயல்விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், குழி போடும் கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, களை எடுக்கும் கருவி, பிரஸ்கட்டர், பார் அமைத்தல், வரப்பு அமைத்தல் கருவி போன்றவை குறித்து பல்வேறு நிறுவனங்கள் சார்பில் செய்து காண்பிக்கப்பட்டது.

**பகலில் வெப்பம் குறைந்து காணப்படும்: வானிலை ஆய்வு மையம் தகவல்**

**நாமக்கல்,**

தமிழகத்தின் மேல் ஈரப்பதத்துடன்கூடிய காற்று வீசுவதால் வானில் மேகமூட்டமும், பகலில் வெப்ப அளவுகள் குறைந்தும் காணப்படும் என்று

நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (பிப்.19 முதல் 21-ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன், வெள்ளிக்கிழமை மட்டும் 2 மி.மீ மழை பெய்ய வாய்ப்புண்டு. காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கி.மீ வேகத்தில் தென்கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 71.6 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 71 சதம் முதல் அதிகபட்சம் 89 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு

தமிழகத்தின் மேல் ஈரப்பதத்துடன்கூடிய காற்று கிழக்கிலிருந்து வீசத் தொடங்கியுள்ளதால், வானத்தில் லேசான மேகமூட்டம் காணப்படுவதுடன், வெப்ப அளவுகள் பகலில் சற்றுக் குறைந்தும் இருக்கும். இரவில் அதிகக் காற்றுடன் கூடிய வானிலை காணப்பட்டு வெப்ப அளவு குறையவும் வாய்ப்புள்ளது. எனினும், பொதுவாக கோட்டைக்கான வெப்ப அளவுகள் உயரத் தொடங்கியுள்ளதால், பண்ணைக் கோழிகளிடையே தீவன எடுப்பு குறையக்கூடும். இதைத் தவிர்க்க தீவனத்தில் எரிசக்தியின் அளவை இனி குறைத்திட வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு

தற்போது வெப்பநிலை உயர்வின் காரணமாக மரவள்ளியில் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் பெருமளவில் காணப்படுகிறது. 2 மி.மீ நீளத்தில் இருக்கும் இந்தப் பூச்சிகள் இலை நரம்புப் பகுதியில் முட்டையிடும். இலையின் அடிப்பரப்பில் சுருள்வடிவ வெள்ளை நிறத் திட்டுகள் காணப்படுவது இந்தப் பூச்சித் தாக்குதலின் அறிகுறிகளாகும். இதனால், கரும்படல நோய் அதிகமாகப் பரவக் கூடும்.

தவிர, ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு, செடியின் வளர்ச்சி குறைந்து மகசூல் இழப்பை ஏற்படுத்தும்.இந்த நோய் கிருமிகளை கட்டுப்படுத்த டிரைஅசோஃபாஸ் என்ற பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மிலி, ஒரு மிலி

ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிப்ரவரி 21-இல் விவசாயிகள் குறை கேட்பு கூட்டம்**

**சேலம்,**

சேலம் மாவட்ட விவசாயிகள் குறை கேட்பு கூட்டம் பிப்ரவரி 21-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சேலம் மாவட்ட விவசாயிகள் குறை கேட்கும் நாள் கூட்டம் வரும் 21-ஆம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு வேளாண்மை சம்பந்தமான தங்களது குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவித்து பயன்பெறலாம் என்று ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**உலர் தீவன விற்பனை மையங்களுக்கு வைக்கோல் விற்க...**

**நாகப்பட்டினம்,**

வறட்சி நிவாரணத் திட்ட உலர் தீவன மையங்களுக்கு வைக்கோல் விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் போட்டி விலைப் பட்டியல் சமர்ப்பிக்கலாம் என ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு : நாகை மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், கீழ்வேளூர், வேதாரண்யம் கால்நடை மருந்தகங்களிலும், சீர்காழி கால்நடை மருத்துவமனையிலும் உலர் தீவன விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விற்பனை மையங்களில் தலா 100 டன் வைக்கோல் கொள்முதல் செய்யப்படவுள்ளது. உலர் தீவன விற்பனை மையங்களுக்கு வழங்கப்படும் வைக்கோலில் 5 சதவீதத்துக்கும் குறைவான ஈரப்பதம் மட்டுமே அனுமதிக்கப்படும். பூஞ்சை, காளான் இல்லாத வைக்கோல்கள் மட்டுமே

கொள்முதலுக்கு ஏற்கப்படும். வைக்கோல் கட்டுகள் ஒவ்வொன்றும் தலா 21 கிலோ எடை கொண்டதாக இருக்க வேண்டும். ஏற்று கூலி, இறக்கு கூலி, போக்குவரத்துக் கட்டணம் உள்பட விற்பனை மையத்துக்குக் கொண்டு வந்து இறக்கும் வரையிலான அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கிய போட்டி விலை புள்ளிகள் விவசாயிகளிடமிருந்து வரவேற்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகள், தொடர்புடைய விற்பனை மையங்களுக்கு 10 நாள்களுக்குள் வைக்கோலை கொண்டு வந்து சேர்க்க வேண்டும். விருப்பமுள்ள விவசாயிகள், ஒவ்வொரு விற்பனை மையங்களுக்கும் தனித்தனியே மூடி முத்திரையிடப்பட்ட போட்டி விலைப் பட்டியலைத் தயாரித்து, மாவட்ட ஆட்சியர் முகவரியிட்டு, நாகை கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் வரும் 19-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

**தூத்துக்குடியில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**தூத்துக்குடி,**

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (பிப். 20) நடைபெறுகிறது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்ட அரங்கில் மாதம் தோறும் மூன்றாவது வியாழக்கிழமை விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பிப்ரவரி மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (பிப். 20) பிற்பகல் 1 மணிக்கு நடைபெறுகிறது.ஆட்சியர் அலுவலக மாடியில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பாசன சபை நிர்வாகிகள், விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கை குறித்து ஆட்சியரிடம் தெரிவிக்கலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் வரும் பிப்ரவரி 21-ம் தேதி நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வரும் பிப்ரவரி 21-ம் தேதி காலை மாவட்ட ஆட்சியர கூட்ட அரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் இக் கூட்டம் சில நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**100 கால்நடை மருத்துவமனைகள் மேம்படுத்தப்படும்: அமைச்சர் ஜெயசந்திரா**

**பெங்களூரு,**

கர்நாடகத்தில் 2014-15 ஆம் நிதியாண்டில் 100 கால்நடை மருத்துவமனைகள் மேம்படுத்தப்படும் என்று, அந்த மாநில கால்நடைத் துறை அமைச்சர் ஜெயசந்திரா தெரிவித்தார்.கர்நாடக சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை பிஎஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திப்பேசாமியின் கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது:மாநிலத்தில் கால்நடைகளைப் பாதுகாப்பதில் அரசு அதிக அக்கறை செலுத்தி வருகிறது. கடந்த ஆண்டு, கோமாரி நோய்த் தாக்கி இறந்த 14,441 கால்நடைகளுக்கு இழப்பீடாக பெரிய மாடுகளுக்கு தலா ரூ. 25 ஆயிரமும், கன்றுக் குட்டிகளுக்கு ரூ. 10 ஆயிரமும் வழங்கப்பட்டன.கோமாரி நோயைக் கட்டுப்படுத்த தேசிய விவசாய ஆணையம் 5 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு மருத்துவமனை அமைக்க பரிந்துரை செய்துள்ளது. மொளக்காலுமூரு தொகுதியில் கடந்த 2007-ஆம் ஆண்டு கணக்கெடுப்புபடி, 1,39, 714 ஆயிரம் கால்நடைகள் உள்ளதாக தெரிய வந்துள்ளது.அங்கு 21 கால்நடை மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. இன்னும் 7 மருத்துவமனைகள் அங்கு தொடங்கப்படும். மேலும், 100 மருத்துவமனைகள் மேம்படுத்தப்படும் என்றார் அவர்.

**தாமிரவருணி ஆறு இணைப்புத் திட்டத்தை செயல்படுத்த நிதி**

**புது தில்லி,**

தாமிரவருணி ஆற்றை கருமேனி, நம்பி ஆறுகளுடன் இணைக்கும் திட்டத்தைப் போர்க்கால அடிப்படையில் செயல்படுத்த மத்திய அரசு நிதி அளிக்க வேண்டும் என்று திருநெல்வேலி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எஸ். ராமசுப்பு வலியுறுத்தினார்.இது தொடர்பாக மக்களவையில் செவ்வாய்க்கிழமை விதி எண் 377-இன் கீழ் அவர் தாக்கல் செய்த அறிக்கையில் கோரியிருப்பதாவது:

தமிழகத்தில் நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் உள்ளிட்ட பகுதிகள் சொற்ப மழைப்பொழிவு காரணமாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. நெல்லை மாவட்டத்தில் உள்ள இப் பகுதிகளில் ஓராண்டில் சராசரியாக 500 மில்லி மீட்டருக்கும் குறைவாகவே மழை பெய்கிறது. மழைக்காலத்தின் போது கருமேனி, நம்பி ஆறுகள் பாயும் மேற்கண்ட பகுதிகளிலும் 252 குளங்களும் பயனடைகின்றன.நெல்லை மாவட்டத்தில் உள்ள தாமிரவருணி ஆற்றில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வரத்து உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் இந்த ஆற்றில் 13 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் உபரியாகச் சென்று கடலில் கலக்கிறது. ஆகவே, கருமேனி, நம்பி ஆறுகளுடன் இணைக்கும் வகையில் கால்வாய் தோண்டுவதன் மூலம் (3,200 கன அடி நீர் சேமிப்புடன்கூடிய), இந்த உபரி நீரைத் திருப்பி விட முடியும். இப் பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

2008-09-ஆம் ஆண்டில் தமிழக அரசு ரூ.369 கோடி மதிப்பீட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள திசையன்விளை, எம்எல் தேரி பகுதிகளுக்கு உபரி வெள்ளநீரைக் கொண்டு செல்வதற்கு கருமேனி, நம்பி ஆறுகளை இணைக்கும் வகையில் வெல்லங்குழியில் இருந்து கால்வாய் தோண்டும் திட்டத்தைத் தொடங்கியிருந்தது.நான்கு கட்டங்களாக மேற்கொள்ளப்படும் இப் பணி 73 கிலோமீட்டர் தூரத்திற்கு முடிக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது பணி முடங்கிப் போயுள்ளது.மத்திய அரசின் 90 சதவீத நிதியில் இருந்து இத் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. இத் திட்டத்தை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, இத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் 90 சதவீதத் தொகையை வழங்க தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எஸ்.எஸ். ராமசுப்பு கேட்டுக் கொண்டுள்ளார்.

### திண்டுக்கல்லை வறட்சி மாவட்டமாக அறிவிக்க சித்தன் எம்.பி. வலியுறுத்தல்

**புது தில்லி,**

திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை அளிப்பதற்குத் தேவையான அனைத்து

நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அத் தொகுதியின் மக்களவை காங்கிரஸ் உறுப்பினர் என்.எஸ்.வி. சித்தன் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக மக்களவையில் செவ்வாய்க்கிழமை விதி எண் 377-இன் கீழ் அவர் தாக்கல் செய்த அறிக்கை: தமிழகத்தில் உள்ள திண்டுக்கல் மாவட்டம் இரண்டாவது ஆண்டாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. பயிர்கள் அனைத்தும் வாடிவிட்டன. மழை பொய்த்துப் போனதன் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் கணிசமான அளவு குறைந்துள்ளது. ஆழ்குழாய்க் கிணறு 600 முதல் 900 அடி வரை ஆழத்திற்குப் போடப்பட்டாலும்கூட தண்ணீர் கிடைக்காத நிலை உள்ளது. திண்டுக்கல் மாவட்டம் தென்னை, மா மரங்களுக்குப் பெயர் பெற்றது.

போதிய நீர்ப்பாசனம், மழைப் பொழிவு இல்லாததால் பெரும்பாலான மரங்கள் வாடிப் போயுள்ளன.இந் நிலையில், விவசாயிகளுக்கு தங்களது விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்காத நிலையும் உள்ளது. எனவே, மத்திய அரசு திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், கொப்பரை தேங்காய்க்கு அடிப்படை ஆதரவு விலையைப் போதுமான வகையில் அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிகள் பயன்பெறுவர் என்று என்.எஸ்.வி. சித்தன் வலியுறுத்தியுள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சின்ன சின்ன செய்திகள்**



தமிழ்நாட்டில் மலைப்பகுதி வேளாண்மை மேம்பட சில உத்திகள்: இராசயன உரங்கள் பயன்படுத்தப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இயற்கை முறைகளைக் கையாண்டு அதற்கான சிறப்பு சான்றிதழ்களை வைத்து காய்கனிகளை வினியோகம் செய்துஅதிக இலாபம் பெறலாம். உயிரியல் பூச்சிக்கொல்லி உயிர் உரங்கள், பஞ்சகாவியா, தசகாவியா ஆகியவற்றை பயன்படுத்தலாம். நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், வேர் உட்பூசணம் போன்றவற்றை எக்டருக்கு 12.5 கிலோ அளவில் பயன்படுத்தலாம். மலைப் பகுதிகளுக்கு ஏற்ற பசுந்தாள் உரங்களான லூபின் பக்கோதுமை ஆகியவற்றை பயிரிட்டு மண்ணுடன் கலந்து மண் வளத்தைப் பெருக்கலாம். காய்ந்த வேளாண்மைக் கழிவுகள், பச்சை களைகளைக் கொண்டு இயற்கை உரங்கள் மண்புழு உரங்களை உழவர்கள் அதிக அளவில் தங்கள் தோட்டங்களிலேயே தயார் செய்து மண்வளத்தைப் பெருக்கலாம்.

கலப்புமுறை வேளாண்மையான ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை ஒருங்கிணைத்து மலைப்பகுதிகளில் செய்யும் பொழுது மண்வளம் அதிகரிப்பதால் அதிக வருமானம் ஈட்டலாம். மலைப்பகுதிகளில் மேற்கொள்ளும் வேளாண்மைப் பயிர்களை அதற்கான அங்கீகரிக்கப்பட்ட இயற்கை வேளாண்மைச் சான்றிதழ் களைப் பெற்று விளைபொருட்களை சென்னை, கோவை, மும்பை பெங்களூரு போன்ற பெரிய நகரங்களுக்கு விற்பனை செய்து 60 சதவீதம் வரை அதிக வருமானம் பெறலாம். மண்ணின் அமிலத்தன்மையைக் குறைக்க ஒவ்வொரு ஆண்டும் எக்டருக்கு 2.5 டன்கள் டாலமைட், இயற்கை உரங்களையும் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். தேயிலைத் தோட்டங்களில் மாற்றுப் பயிராக சில்வர் ஓக் மரங்களுடன் ஆலிவ், பிளம்ப்ஸ், பேரி, பீச் போன்ற அதிக வருமானம் தரும் பழமரங்களை நடவு செய்யலாம். காப்பி தோட்டங்களில் அதிக வருமானம் தரக்கூடிய வெண்ணைப் பழ மரங்களின் ஒட்டுக்கன்றுகளை நிழல் தருவதற்காக நடவு செய்து அதிக இலாபம் ஈட்டலாம். தேயிலைத் தோட்டங்களில் பயிரிடப்படும் தேயிலை அங்கீகரிக்கப்பட்ட வேளாண்மை சான்றிதழ் பெற்று மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களான சில்வர்டிப் தேயிலை, கிரீன் தேயிலை, வெள்ளைத் தேயிலை போன்ற உயர் ரகத் தேயிலைகளைச் சர்வதேச நாடுகளான அமெரிக்கா,

ஐரோப்பா, ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தேயிலை வருமானத்தை இரட்டிப்பாக்கலாம்.தண்ணீர் பற்றாக்குறை உள்ள மேட்டு நிலங்களில் வாசனைப் பயிர்களான ரோஸ்மேரி, தைலம், ஜெரோனியம், அரிப்பைத் தடுக்கும் எலுமிச்சை புல் சிட்ரோனெல்லா புல், வெட்டிவேர் போன்ற பயிர்களைச் பயிர் செய்து அதிக இலாபம் பெறலாம். மேலும் அயல்நாடு காய்கறிகளை அதிக அளவில் பயிர் செய்து நேரடியாக விற்பனை செய்து இலாபம் ஈட்டலாம். **(தகவல்: முனைவர் கு.இராமசாமி, துணைவேந்தர், த.வே.ப. கழகம், கோயம்புத்தூர் -641 003)**

**இஞ்சி:** குழிகளில் சேமித்து வைத்துள்ள விதைக்கிழங்குகளை 20 நாட்களில் ஒருமுறை களை களைத்து வதங்கிய மற்றும் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றிவிட வேண்டும்.

**மஞ்சள் அறுவடை:** தாமதமாக நட்ட தோட்டங்களில் மஞ்சளை அறுவடை செய்யவும், முன்பாகவே அடையாளவிட்ட செடிகளைத் தனியாக அறுவடை செய்து பின்னர் அவற்றை விதை மஞ்சளுக்காக உபயோகபடுத்தலாம். மற்ற செடிகளையும் முதிர்ச்சியின் அறிகுறியைப் பொறுத்து அறுவடை செய்யலாம். விதை மஞ்சள் சேமிப்பு: முன்பாகவே அறுவடை செய்த தோட்டங்களில் குழிகளில் சேமித்து வைத்துள்ள விதைக் கிழங்குகளை 20 நாட்களுக்கு ஒருமுறை கண்காணித்து வதங்கிய மற்றும் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றிவிட வேண்டும். அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பம்: அறுவடை செய்த மஞ்சளை விரலி மற்றும் கிழங்கு (குண்டு) எனத் தனித்தனியாக பிரித்து மஞ்சளைப் பதப்படுத்த வேண்டும். வேகவைத்த பின் மஞ்சளை சுத்தமான உலர்களம் அல்லது தார்ப்பாய் மீது பரப்பி 10-15 நாட்கள் வரை உலர்த்த வேண்டும். மெருகேற்றும் இயந்திரத்தின் மூலம் உலர வைத்த மஞ்சளை மெருகேற்ற வேண்டும்.

**- டாக்டர். கு.சௌந்தரபாண்டியன்.**

## மண்புழு உரம் தயாரிப்பு தொழில்நுட்பம்

**தொட்டி முறையில் மண்புழு உரம் தயாரித்தல்:** இந்த முறையில் 3 அடி அகலம் 11/2 அடி உயரம் 20 அடி நீளம் கொண்ட சிமென்ட் தொட்டிகளை கட்டிக் கொள்ள

வேண்டும். இதுபோல அவரவர் வசதிக்கு ஏற்ப எத்தனை தொட்டி வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளலாம்.தொட்டியின் அடிப்பாகத்தில் தண்ணீர் வெளியேற்றுவதற்காக 5 அடிக்கு ஒரு துவாரம் வீதம் இருக்கும் வண்ணம் அமைத்துக் கொள்ள வேண்டும். தொட்டியில் மண்புழு உரம் தயாரிக்க மழை மற்றும் வெய்யிலிலிருந்து பாதுகாக்க கீற்றுக் கொட்டகைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.மக்கிய கால்நடைக் கழிவுகள் மற்றும் காய்கறிக் கழிவுகளை மேற்சொன்ன தொட்டிகளிலிட்டு தண்ணீர் தெளித்து வரவேண்டும். வெப்பம் அடங்கிய பின்னர் உரத் தயாரிப்பிற்கு தயாராக உள்ள மேற்படி கழிவுகளின் மேல் பரப்பில் தேர்ந்தெடுக்க மண்புழுக்களை இடவேண்டும். மண்புழுக்கள் மண்புழு உர உற்பத்தி செய்து வரும். பண்ணையாளர்களிடம் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

* சதுர மீட்டருக்கு 2000 புழுக்கள் என்ற அளவில் விட வேண்டும்.
* தோராயமாக 1 கிலோவிற்கு 1500 முதல் 2000 புழுக்கள் இருக்கும்.
* பத்து கிலோ மண்புழுக்கள் 1 மாதத்தில் 1 டன் கழிவுகளை உண்ணும் திறனுடையவை.
* மண்புழுக்கள் 2 1/2 மாதத்தில் 2 மடங்கு இனப்பெருக்கம் அடைந்து விடும்.

மண்புழு உரத்திலுள்ள நுண்ணூட்ட சத்துக்களின் அளவுகள்

**<u>நுண்ணுட்டம் - மண்புழு உரம் - சாதாரண தொழு உரம்</u>**

நைட்ரஜன் - 1.5% - 0.3%

பாஸ்பரஸ் - 1.0% - 0.2%

பொட்டாஸ் - 0.65% - 0.3%

ஜிங்க் - 04.6 PPM - 14.5 PPM

இரும்பு - 1247.3 PPM - 1465 PPM

மாங்கனீஷ் - 509.7 PPM - 69.0 PPM

தாமிரம் - 61.5 PPM - 2.8 PPM

பயிர்களுக்கு வழங்கும் மண்புழு உரத்தின் அளவுகள்

**பயிர் - அளவு ஏக்கர் 1க்கு**

நெல் - 500 முதல் 750 கிலோ/1 ஏக்கர்

கரும்பு - 1000 முதல் 1500 கிலோ / 1 ஏக்கர்

பயிறு வகைகள் - 500 கிலோ / 1 ஏக்கர்

உருளைக்கிழங்கு - 1000 முதல் 1500 கிலோ

காய்கறிகள் - 750 கிலோ

எண்ணெய் வித்துக்கள் - 1000 கிலோ

பூச்செடிகள் - 750 முதல் 1000 கிலோ

மஞ்சள், இஞ்சி, பூண்டு - 1000 கிலோ

வெற்றிலை - 1000 கிலோ

ஏலக்காய், கிராம்பு, ரப்பர் - 3 முதல் 8 கிலோ வரை / செடி 1க்கு

அழகு பூ தொட்டிகள் - 200 கிராம் -1 பூ தொட்டிற்கு

மாமரம், தென்னை, பாக்கு, கொய்யா, மாதுளை, வாழை - 3 கிலோ 1 மாதத்திற்கு

சப்போட்டா - 7 கிலோ முதல் 10 கிலோ வரை / 1 மாதத்திற்கு

N.பழனிச்சாமி, S.S.மண்புழு உரத்தொழிற்சாலை,

மதுரை மாவட்டம். 98426 88456, 98425 24480

## குண்டு மல்லிகையின் எதிர்காலம்

மதுரை குண்டு மல்லிகையின் சிறப்பினை ""மணம் தரும் மல்லிகை பணமும் தரவல்லது" என்று புகழ்ந்து வந்தது உண்மை. ஏர்போர்ட், பூக்கடைகள் போன்ற எந்த இடங்களுக்கு சென்றாலும் மல்லிகையின் நறுமணம் வீசிக் கொண்டிருக்கும். மல்லிகைப்பூ சாகுபடியானது ஒரு கடுமையான பணியாகும். இதனால் விவசாயிகள் சாகுபடியில் ஒரு ஏக்கர் அல்லது 1-1/2 ஏக்கர் இந்த பரப்பிற்கு அதிகமாக சாகுபடி செய்வதில்லை. புதிதாக மல்லிகை தோட்டத்தை துவங்கினால் அது அந்த இடத்தில் பத்து வருடங்கள் இருக்கும். புதிதாக நட்ட இடத்தில்

மூன்றாவது வருடம் பூக்கத் தொடங்கிய தோட்டம் பத்து வருடங்கள் வரை பூத்துக் கொண்டு இருக்கும்.இதற்கு பின் மல்லிகை தோட்டம் அழிக்கப்படுகிறது. விவசாயிகள் இரண்டு வருடங்களுக்கு பிறகு ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தங்கச்சிமடம் கிராமத்தில் கிடைக்கும் மல்லிகைப் பதியன்களை வாங்கி நடுகிறார்கள்.

விவசாயி செய்யும் முக்கிய பணிகள்: களை எடுத்தல், பாசனம், உரங்கள், எரு இடுதல், பயிர் பாதுகாப்பு, பூக்கள் பறித்தல், இருமுறை செடிகளுக்கு கவாத்து செய்வது (1) அக்டோபர் கடைசி (2) டிசம்பர் முதல் வாரம் செடிகளின் இலைகளை உருவி விடுதல்.

பூக்கள் பறிக்கும் பணி அதிகாலை ஐந்து மணிக்கு துவங்குகின்றது. பறிக்கும்போது திறமையான பெண் ஆட்கள் ""அரும்புகளை" (மலராத பூக்கள்) பறிக்கின்றனர். அப்போது கடும் இருட்டாக இருக்கும். இந்த பெண்களுக்கு இறைவன் கொடுத்த வரம் இவர்களுக்கு உள்ள ஸ்பரிசம் ஆகும். இது முக்கியமான துணிச்சல், நெல் நாற்று நடும் பெண்களை விட அரும்பினை பறிக்கும் பெண்கள் அதிக திறமை கொண்டவர்கள். மேலும் அரும்பினை ஆறு மணிக்குள் மார்க்கெட்டிற்கு கொண்டு செல்லுதல், அப்போது நிறைந்த அளவு அரும்புகளை ஆறு மணிக்கும் மார்க்கெட்டிற்கு கொண்டு செல்லும்போது அதிக வரவு கிடைக்கின்றது. விவசாயி தனது தோட்டத்திற்கு திரும்பி பூக்களை எடுத்துக் கொண்டு மார்க்கெட்டிற்கு திரும்ப வேண்டும். இது மாதிரி 5,6 தடவைகள் மார்க்கெட்டிற்கு திரும்ப வேண்டிய பணி. விவசாயி ஒரு நாளில் 17 முறைகள் ஒருநாள் பணி செய்ய வேண்டும். பெண்கள் பணி செய்யும் போது விஷ ஜந்துகள் போன்றவைகளால் கெடுதல்கள் ஏற்படும் பயம் உண்டு.

பயிர் வளர்த்தலும் அதன் நிர்வாகமும்:

* விவசாயி செடிகளை நன்கு கவனிக்க வேண்டும்.

* முதல் முதலாக குறித்த நேரத்தில் பாசனம் செய்தல்.

* திறமையான பயிர் பாதுகாப்பு செய்தல்.

* மார்க்கெட்டிற்கு எவ்வளவு விரைவில் மல்லிகையை கொண்டு செல்ல வேண்டுமோ அந்த அளவிற்கு சுறுசுறுப்பு தேவை.

* மார்க்கெட்டிற்கு எந்த விவசாயி அதிக அளவு பூக்களை எடுத்துச் செல்கின்றார்களோ அந்த அளவிற்கு பணம் சம்பாதிக்க முடியும்.

* சாகுபடியை கவனிக்கும் போது மண்ணிற்கு நுண்ணூட்டச் சத்து கொண்டு உரங்களை இட வேண்டும்.

* தழை, மணி சாம்பல் கலந்த உரங்கள் நன்கு மக்கிய சாணி உரங்கள் ஒரு வருடம் இருமுறை இட வேண்டும்.

* செடிகளில் சோர்வின் அறிகுறிகள் தென்பட்டால் "ஹார்மோன்' உபயோகித்து சரிசெய்ய வேண்டும்.

* மல்லிகை சாகுபடியில் கடும் சோதனை. அடிக்கடி ஆட்கள் கிடைக்கும் பிரச்னை அதிகரிக்கின்றது.

* எரு, உரம், பூச்சி மருந்து இவைகளின் விலை வாங்க இயலாத நிலை அடிக்கடி ஏற்படுகின்றது.

* விவசாயிகள் மிக அதிக பயம் கொள்வதற்கு காரணம் இனி எதிர்காலத்தில் மல்லிகை சாகுபடி கடுமையாக குறைந்து வருகின்றது.

* இந்த வருடம் கடும் மூடுபனி தாங்க முடியாத அளவிற்கு ஏற்பட்டது. இந்த அதிர்ச்சி கார்த்திகை, மார்கழி மற்றும் தை மாதங்களில் ஏற்பட்ட செயல் மகசூலை குறைத்து நஷ்டத்தை ஏற்படுத்தியது.

மல்லிகை சாகுபடியில் மிக பிரபலமான விவசாயி சிங்கராஜ் (68, கிழங்கு தெரு, வலயப்பட்டி , மதுரை-625 002) இனி வரும் வருடங்களில் மல்லிகை சாகுபடி இருக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டது என்று சொல்கிறார்.

- எஸ்.எஸ்.நாகராஜன்.

## தொழில் வழித்தடத்தால் தென்மாவட்டங்கள் வளம்பெறும்

**மதுரை,**

"மதுரை, தூத்துக்குடி இடையே உருவாகும் தொழில் வழித்தடத்தால் (இண்டஸ்ட்ரியல் காரிடார்) தென் மாவட்டத்தில் தொழில்வளம் பெருகும்," என, சி.ஐ.ஐ., முன்னாள் தலைவர் கதிர்காமநாதன் பேசினார்.

மதுரையில் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் சார்பில், முன்னோடி விவசாயிகள், தொழில் முனைவோருக்கான கருத்தரங்கு நடந்தது. இந்திய தொழிற் கூட்டமைப்பு(சி.ஐ.ஐ.,) மற்றும் வேளாண்மை விற்பனை வாரியம் இணைந்து ஏற்பாடுகளை செய்திருந்தன. விவசாயத் துறை இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை, வேளாண் நுண்ணறிவு மைய இயக்குனர் செல்வம், துணை இயக்குனர்கள் கனகராஜ், ரவிச்சந்திரன், சாரநாத்பாபு, மூர்த்தி, சி.ஐ.ஐ., தலைவர் ரோஹிணி ஸ்ரீதர் பங்கேற்றனர்.

சி.ஐ.ஐ., முன்னாள் தலைவர் கதிர்காமநாதன் பேசியதாவது: மதுரை, தூத்துக்குடி இடையே 'தொழில் வழித்தடம்' உருவாக்கப்பட உள்ளது. இத்தொழில் வழித்தடத்தில் மதுரை, ராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி என, நான்கு தொழிற்சாலை குழுமங்கள் (ஹப்) உருவாகும். ஒவ்வொன்றிலும், அரசும், தனியாரும் இணைந்து செயல்படுவர். மதுரையில் அடிப்படை கட்டமைப்புக்கு அரசு ரூ.3800 கோடியும், தனியார் தொழில் பங்களிப்பாக ரூ.12 ஆயிரம் கோடியும் வரும் வாய்ப்பு உள்ளது. தூத்துக்குடியில் மீன்பிடித்தலை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் தனியார் பங்களிப்பில் ரூ. 18 ஆயிரம் கோடி, அரசு பங்காக ரூ. 4300 கோடியில் செயல்படுத்தப்படும். நெல்லையில் அரசு சார்பில் ரூ. 2800 கோடியும், தனியார் பங்களிப்பாக ரூ. 61 ஆயிரம் கோடியும் செலவிடப்படும். ராமநாதபுரத்தில் பெட்ரோ கெமிக்கல் சார்ந்த தொழில்கள் ஏற்படுத்தப்படும். இவைதவிர மதுரை, நெல்லையில், உயர்கல்விக்கான 'அறிவுசார் தொழில் குழுமம்' (நாலெட்ஜ் ஹப்) உருவாக்கப்பட உள்ளது. மதுரை, சிவகங்கை, கன்னியாகுமரியை மையமாக வைத்து சுற்றுலா தொடர்பான தொழில் குழுமம் ஏற்படுத்தவும் திட்டம் உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## மேட்டூர் அணை நீர்வரத்து 79 கன அடியாக சரிவு

**மேட்டூர்,**

மேட்டூர் அணை டெல்டா பாசன நீர், கடந்த, 28ம் தேதி நிறுத்தப்பட்டு, தற்போது கரையோர மாவட்ட குடிநீர் தேவைக்காக, காவிரியாற்றில் வினாடிக்கு, 600 கன அடி நீர் திறக்கப்பட்டு உள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில், கடும் வறட்சி நீடிப்பதால், நேற்று முன்தினம், 149 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று, 79 கன அடியாக சரிந்தது. அணையின், நீர் வெளியேற்றத்தை விட, நீர் வரத்து குறைவாக இருப்பதால், நேற்று, மேட்டூர் அணை நீர் மட்டம், 51 அடியாகவும், நீர் இருப்பு, 18 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது.

## பாம்பன் நாட்டுப்படகில் 'சூடை' மீன்பாடு குறைவு

**ராமேஸ்வரம்,**

பாம்பன் நாட்டுப்படகு மீனவர்களுக்கு, 8 நாட்களுக்கு பின், மீன்பிடிக்க சென்றபோது, எதிர்பார்த்த 'சூடை' மீன்பாடு கிடைக்காமல், ஏமாற்றம் அடைந்தனர். தடை செய்யப்பட்ட இரட்டைமடி, சுருக்கு மடி வலைகள் பயன்பாட்டை தடுக்கக்கோரி, ராமேஸ்வரம், பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள், பிப்., 9 முதல் 'ஸ்டிரைக்' கில் ஈடுபட்டனர். 8 நாள்களுக்கு பின், கடந்த பிப்., 17 ல், 'ஸ்டிரைக்'கை வாபஸ் பெற்று, 300 க்கு மேற்பட்ட படகுகளில், மீன் பிடிக்கச் சென்றனர். நடுக்கடலில் வீசிய சூறாவளியால், சூடை மீன் எதிர்பார்த்த அளவில் கிடைக்காமல், ஏமாற்றத்துடன் கரை திரும்பினர். ஒரு படகிற்கு 100 முதல் 150 கிலோ வரையே கிடைத்த சூடை மீன்களை, ஒரு கிலோவை ரூ.30 க்கு கேரள மீன் வியாபாரிகள் வாங்கினர். இருப்பினும், 'வாலை, பார்' மீன்கள் ஓரளவுக்கு கிடைத்தால், நஷ்டமின்றி கரை திரும்பியதாக, மீனவர்கள் தெரிவித்தனர்.

## கூட்டுறவு கடன் கொள்கையில் மாற்றம்

**தேனி,**

கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படும் பயிர்க்கடனில், 30 சதவீதம், புதிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டும், என கூட்டுறவு கடன் கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில், ஆண்டு தோறும் பல கோடி ரூபாய், விவசாய பயிர்க்கடனாக வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பயிர்க்கடன் வழங்கும் இலக்கு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனால், பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கை உயரவில்லை. ஏற்கனவே கடன் வாங்கி, பலமுறை சலுகைகளை அனுபவித்த விவசாயிகளே மீண்டும், மீண்டும் கடன் சலுகை பெறுகின்றனர். புதிய மற்றும் ஏழை விவசாயிகள், கடன் பெற முடியவில்லை. அவர்களுக்கு உதவும் வகையில், அரசு கூட்டுறவு கடன் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்துள்ளது. இதன்படி, ஒவ்வொரு ஆண்டும் தொடக்க விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பயிர்க்கடனில், 30 சதவீதம் புது விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும், என அரசு அறிவுறுத்தி உள்ளது. புது விவசாயிகளை சங்கத்தில் உறுப்பினராக சேர்த்து, அவர்களுக்கும் கடன் வழங்கி, விவசாயம் செய்ய ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு சங்கத்திற்கும் வழங்கப்படும் கடன் அனுமதி தொகையில், கட்டாயம் 30 சதவீதம் புது விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கடன் பெறும், புது விவசாயிகளின் பட்டியலை மாவட்ட கூட்டுறவுத் துறைக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் அரசு அறிவுறுத்தி உள்ளது. புது விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படுவதை, உயர் அதிகாரிகள் ஆய்வு செய்து, உறுதிப்படுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஆழ்கடலில் மீன்பிடிக்க தேவை ரூ.30 கோடி: ராமேஸ்வரம் மீனவர்கள் வலியுறுத்தல்

**ராமேஸ்வரம்,**

இலங்கை மீனவர் பிரச்னை, தடை செய்யப்பட்ட வலையில் மீன்பிடிப்பது ஆகியவற்றில் இருந்து விலகி, ஆழ்கடலில் மீன்பிடிக்க, மாநில அரசு, 30 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும்' என, ராமேஸ்வரம் மீனவர்கள் கோரியுள்ளனர். பாம்பன் மீனவர் சங்க தலைவர், யு.அருளானந்தம் கூறியதாவது: இலங்கை மீனவர் பிரச்னை, தடை செய்யப்பட்ட வலையில் மீன்பிடிப்பது ஆகியவற்றில் இருந்து விலகி, ஆழ்கடலில் மீன்பிடிக்க வேண்டுமானால், அதற்கு அரசின் உதவி வேண்டும். தூத்துக்குடி, குமரி மாவட்டங்களை சேர்ந்த, தரவைகுளம், தூத்தூர் மீனவர்கள், பாம்பன் பாலத்தை கடந்து, 450 கடல் மைல் (ஒரு கடல் மைல், 1.8 கி.மீ.,) தொலைவில் உள்ள வங்கக் கடலில், மீன்களின் புகலிடமான, 'பெட்ரோ பங்க்' எனுமிடத்தில் மீன்பிடிக்க செல்கின்றனர். ஆனால், ராமேஸ்வரத்தில் இருந்து, 180 கடல் மைல் தொலைவில் உள்ள, 'பெட்ரோ பங்க்'கில் மீன்பிடிக்க, ராமேஸ்வரம் மீனவர்களால் முடியவில்லை. காரணம், ஆழ்கடலில் மீன்பிடிக்க தகுந்தாற்போல் படகு இல்லை. ஒரு படகை மாற்றியமைக்க மற்றும் புதிய வலைகள் வாங்க, தலா, 15 லட்சம் ரூபாய் என, மொத்தம், 30 லட்சம் ரூபாய் தேவைப்படும். கடந்த, 20 ஆண்டுகளாக, இலங்கை கடற்படையால் பாதித்த இப்பகுதி மீனவர்களுக்கு, முதல் கட்டமாக, 100 படகுகளுக்கு, மாநில அரசு, 30 கோடி ரூபாய் ஒதுக்கி, மானியத்துடன் கடன் வழங்க வேண்டும். இது தொடர்பாக, மத்திய அரசிடமும் மனு கொடுத்துள்ளோம். இவ்வாறு, அவர் கூறினார். எட்டு நாட்களுக்கு 300க்கும் மேற்பட்ட படகுகளில், மீன் பிடிக்கச் சென்றனர். நடுக்கடலில் வீசிய சூறாவளியால், 'சூடை மீன்' எதிர்பார்த்த அளவில் கிடைக்காமல், ஏமாற்றத்துடன் கரை திரும்பினர்.

## காவனூரில் உழவர் வயல்வெளி பயிற்சி

**கம்மாபுரம் ,**

கம்மாபுரம் அடுத்த காவனூர் கிராமத்தில், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், உழவர் வயல்வெளி பயிற்சி நடந்தது. வேளாண் அலுவலர் சுதமதி, தனியார் நிறுவன விற்பனை மேலாளர் மேகநாதன் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண் அலுவலர் தனசேகரன் உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில், களைக்கொல்லி பயன்படுத்தி களைகளை கட்டுப்படுத்த பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், உளுந்து, பயறு வகைப் பயிர்களில் மகசூல் அதிகரிக்க டி.ஏ.பி., கரைசல் தெளித்தல் உட்பட நவீன தொழில்நுட்ப செயல் விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது.

## வாய் கோமாரி நோயை தடுக்க முன்னேற்பாடு! 3.70 லட்சம் தடுப்பூசிகள் வருகை

**ஈரோடு,**

ஈரோடு மாவட்டத்தில் உள்ள கால்நடைகள் உயிர்காக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்நடை பராமரிப்பு துறைக்கு, 3.70 லட்சம் கோமாரி நோய் தடுப்பூசிகள் வந்துள்ளது. கிராமப்புற வளர்ச்சி, விவசாயிகளின் கூடுதல் வருவாய் கால்நடைகளை நம்பியே உள்ளது. இக்கால்நடை வளர்ப்பில், கோமாரி நோய் என்பது விவசாயிகளுக்கு, பெரும் சவாலாக உள்ளது. பொதுவாக, மழைக்காலம் துவங்கினால், கால்நடைகளுக்கு வாய் கோமாரி நோய் தாக்கம் (எஃப்.எம்.டி.,) அதிகரிக்கும். கலப்பின மாடுகளை, கால் மற்றும் வாய் கோமாரி நோய் அதிகம் தாக்கி, கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும். இந்நோயால், கறவை மாட்டில் பால் உற்பத்தி குறையும். சினை பிடிப்பு தடைபடும். எருதுகளின் வேலைத்திறன் குறையும். இளங்கன்றுகளின் இறப்பு சதவீதம் உயரும். பருவநிலை மாற்றத்தால், தமிழகம் முழுவதும் ஆங்காங்கே, கோமாரி நோய் தாக்கி, அதன் இறப்பு சதவீதம் அதிகரித்தது. விவசாயிகளும், தங்கள் கால்நடைகளின் உயிர்காக்க பல்வேறு விதமாக

போராடினர். இருந்தும், நோய் தாக்கிய கால்நடைகள், கிராமங்கள் வாரியாக இறந்தன. கறவை மாடுகளுக்கு, கோமாரி நோய் தாக்காமல் இருக்க, கால்நடை பராமரிப்பு துறை சார்பில், ஆண்டுக்கு இரு முறை, மாவட்டம் வாரியாக, லட்சக்கணக்கில் தடுப்பூசி அனுப்பப்படுகிறது.

மார்ச், 1 முதல், 21ம் தேதி வரை ஒரு முறையும், செப்., 15 முதல் அக்., 6ம் தேதி வரையும், தலா, 21 நாட்கள், நோய் தாக்கம் அதிகமுள்ள கிராமங்களை தேர்ந்தெடுத்து, கால்நடை பராமரிப்பு துறை சார்பில், அங்குள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது.

அதன்படி, நடப்பாண்டு மார்ச் முதல் வாரத்தில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 14 யூனியனில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது. இதற்காக, ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையின், மண்டல இணை இயக்குனர் அலுவலகத்துக்கு, 3.70 லட்சம் தடுப்பூசிகள் வந்துள்ளது. இந்த தடுப்பூசிகள், மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் உள்ள, கால்நடை நோய் புலனாய்வு பிரிவில் உள்ள குளிரூட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு நாட்களில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்கு, இந்த தடுப்பூசி அனுப்பி வைக்கப்பட உள்ளது. ஈரோடு கலெக்டர் சண்முகம் தலைமையில், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் ஜெயராமன், துணை இயக்குனர் பிரகாசம் மற்றும் உதவி இயக்குனர்கள், பஞ்சாயத்து தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு கவுன்சிலர்கள், ஆவின் நிர்வாகத்தினர் கொண்ட குழுவினர் கூடி, கோமாரி நோய் அவசியம் குறித்த கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது. இந்த கூட்டத்தில், கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து விவாதித்து, அதன்பின் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது.

## தனியார் பட்டா நிலங்களில் மரம் வளர்ப்பு வேன் மூலம் கிராமங்களில் பிரச்சாரம்

**சென்னிமலை,**

தனியார் பட்டா நிலங்களில், மரம் வளர்க்க, அரசு உதவி வருகிறது. இதை மக்களுக்கு தெரிவிக்கவும், மக்களிடம் மரம் வளர்ப்பின் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அரச்சலூர் வனவிரிவாக்க மையமும், அஸ்வத் சேவை நிறுவனம் சார்பில் ஊர்தி மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தினர். சென்னிமலை யூனியன் குப்பிச்சிபாளையம், முருங்கத்தொழுவு, வாய்பாடி, பாலதொழுவு, கொங்கம்பாளையம் ஆகிய, ஐந்து கிராமத்தில் தரிசாக கிடக்கும், தனியார் பட்டா நிலங்களிலும், விவசாய நிலங்களில் வரப்பு ஓரத்திலும் மரம் வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்த, விவசாயிகளிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்து வருகின்றனர்.அக்கிராமங்களில் புள்ளி விபரம் சேகரித்து, மகளிர் குழு மூலம் கலந்தாய்வு கூட்டம் நடத்தினர்.

உள்ளாட்சி நிர்வாகிகளை சந்தித்து திட்டம் குறித்து கூறி, அவர்கள் மூலம் திட்டபயனாளிகள் தேர்வு செய்யவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் துண்டறிக்கை மூலம், விரிவான பிரச்சாரம் செய்ய, பிரச்சார வேன் தயார் செய்தனர்.

பிரச்சார ஊர்த்தி விழிப்புணர்வு பயணம், சென்னிமலை யூனியன், குப்பிச்சிபாளையம் கிராமத்தில் நடத்த விவசாயிகள் விழிப்புணர்வு கூட்டத்தில், சேலம் மண்டல துணை வனபாதுகாவலர் ஜெகதீஸ் கொடியசைத்து, பிரச்சார பயணத்தை துவக்கி வைத்தார்.வனவிரிவாக்க அலுவலர் சேகர், குப்பிச்சிபாளையம் பஞ்சாயத்து தலைவர் கோவிந்தசாமி, அஸ்வத் சேவை நிறுவன செயல் இயக்குனர் சிவக்குமார், செயலாளர் தங்கமணி, கள அலுவலர்கள் கதிர்வேல், தங்கராசு, அரச்சலூர் வனசரகர் குழந்தைவேலு, வனவர்கள் பிரபாகரன், பெரியசாமி, தொழிற்நுட்ப உதவியாளர் முகுந்தன் உட்பட பலர் பங்கேற்றனர்.குப்பிச்சிபாளையம், முருங்கத்தொழுவு உட்பட பல கிராமங்களில்

விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டு, துண்டு பிரசுரங்கள் வினியோகித்தனர். இரண்டாம் கட்டமாக தேர்வு செய்யப்பட்ட கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தொடர்ந்து, விவசாயிகளுக்கு தேவையான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, மழைக்காலத்தில் நடவு செய்ய ஏதுவாக, இப்பகுதி விவசாயிகளுக்கு, மூன்று லட்சம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

## மின் அணையில் இருந்து தண்ணீர் திறக்க ஈரோடு மாவட்ட விவசாயிகள் எதிர்பார்ப்பு

**கோபிசெட்டிபாளையம்,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால், மின் அணைகளில் இருந்து, தண்ணீர் விட நடவடிக்கை எடுக்க வேண்டும், என, விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக பவானிசாகர் அணை விளங்குகிறது. பவானிசாகர் அணையின் மூலம் எல்.பி.பி., தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் ஆகிய பாசனங்கள் பயன்பெறுகின்றன. நான்கு பாசனங்களிலும், 2.5 லட்சம் ஏக்கரில் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது. பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகரி, தெங்குமரஹாடா, குந்தாலகெத்தை, பில்லூர், மொய்யாறு ஆகிய பகுதிகளில், கடந்த ஆண்டில் லேசான மழை பெய்தது. கடந்த, மூன்று மாதங்களாக மழை பெய்யவில்லை. அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக குறைந்தது, அணையின் நீர்மட்டம், 43.07 அடியாகவும், அணைக்கு, 26 கனஅடி தண்ணீர் வரத்தாகிறது. அணையில், 3 டி.எம்.ஸி., தண்ணீர் இருப்பு உள்ளது.

வரும் காலங்கள் கோடைக்காலம் என்பதால், அணையின் நீர்மட்டம் மேலும்,

வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளதே தவிர, உயர வாய்ப்பில்லை. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் படி, எல்.பி.பி., பாசனத்தில் தண்ணீர் திறக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

பவானிசாகர் அணையின் மேற்பகுதியில் உள்ள குந்தா, பில்லூர், பைக்கரா, அப்பர்பவானி, எமரால்டு, அவலாஞ்சி ஆகிய மின் அணைகள் மூலம், 18.5 டி.எம்.சி., தண்ணீர் தேக்கி வைக்கப்படும். பருவமழை பொய்த்ததால், நடப்பாண்டு, எட்டரை டி.எம்.எஸி., தண்ணீர், மின் அணைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. விவசாயத்துக்கு தண்ணீர் தேவைப்படும்போது, மின் நிலையங்களில் இருந்து, அணைக்கு தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம், என்ற அரசாணை உள்ளது.

கடந்த, 2002ம் ஆண்டு நஞ்சை பாசனத்துக்காக, 10 நாட்கள் தண்ணீர் எடுக்கப்பட்டது.அணையின் நீர்மட்டம் குறைந்த காரணத்தால், மின் நிலையங்களில் இருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி, விவசாயிகள் சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால், மின் அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கீழ்பவானி முறை நீர்பாசன விவசாயிகள் சபை செயலாளர் வெங்கடாசலபதி கூறியதாவது: பவானிசாகர் அணையின் மேற்பகுதியில் மின் அணைகளில், 18.5 டி.எம்.சி., தண்ணீர் தேக்கி வைக்க முடியும். சரியாக மழை பெய்யாததால், தற்போது, எட்டரை டி.எம்.ஸி., தண்ணீர் இருப்பு உள்ளது. அணையின் நீர்மட்டம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால், பவானிசாகர் அணையின் மேற்பகுதியில் உள்ள, மின் அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## நான்கு மீனவர் குடும்பத்துக்கு தலா ரூ1 லட்சம் நிதி

**நாகர்கோவில் ,**

நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் நிகழ்ச்சியில் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் விபத்தில் மரணமடைந்த குளச்சலை சேர்ந்த கிளிட்டஸ், இராமன்துறையை சேர்ந்த ஆபிரகாம், பள்ளத்தை சேர்ந்த செல்வராஜ், கன்னியாகுமரியை சேர்ந்த ஜென்சன் ஜோணி ஆகிய 4 மீனவர்களின் குடும்ப வாரிசுதாரருக்கு நிவாரண தொகையாக ரூ.1 லட்சத்திற்கான காசோலைகளை கலெக்டர் வழங்கினார்.

## மாற்றுப்பயிர்கள்: விவசாயிகள் ஆர்வம்

**படப்பை,**

குன்றத்தூர் ஒன்றியத்தில், மாற்றுப்பயிர்களை விவசாயிகள் பயிரிட துவங்கி உள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த பருவமழை பொய்த்து போனது. இதனால், ஏரிகள் வறண்டன. இதனால், தண்ணீர் அதிகம் தேவைப்படாத பயறு வகைகளை நடவு செய்ய விவசாயிகள், ஆர்வம் காட்டி வருகின்றனர். குன்றத்தூர் ஒன்றியத்தில் எள், மக்காச்சோளம், பச்சைப்பயிறு, துவரை ஆகிய பயிர்களை, விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். ஒன்றியத்தில், 7,800 ஏக்கரில் கடந்த ஆண்டு நெல் பயிரிடப்பட்டது. ஆனால், நடப்பாண்டில் 6,500 ஏக்கர் மட்டுமே, நெல் பயிரிடப்பட்டுள்ளது. இது தவிர, 120 ஏக்கர் எள், 10 ஏக்கர் மக்காச்சோளம், 150 ஏக்கர் பச்சைப் பயறு, 25 ஏக்கர் துவரை என, தண்ணீர் அதிகம் தேவைப்படாத பயிர்களை விளைவித்து வருகின்றனர். இது குறித்து, குன்றத்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஹெக்டேர் கூறுகையில், "மாற்றுப்பயிர்களை

பயிரிடுவது குறித்து, வேளாண் அதிகாரிகளிடம் விவசாயிகள் விவரங்கள் சேகரித்து வருகின்றனர். பிற பகுதி விவசாயிகளும் மாற்றுப்பயிர்களை பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்," என்றார்.

## இயற்கை வழி வேளாண்மையில் காய்கறி சாகுபடி: விவசாயிகளுக்கு ஆலோசனை

**ஆனைமலை ,**

ஆனைமலை அடுத்த வாழைக்கொம்பு ஊராட்சியில், தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை, சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2013-2014 திட்டத்தில், விவசாயிகளுக்கு இயற்கை வழி வேளாண்மையில் காய்கறி பயிர் சாகுபடியில் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, தோட்டக்கலைத்துறை விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகள் ஆலோசனை வழங்கினர். ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் சோபா பேசுகையில், "பயிர்களில் காணப்படும் நோய்களை கட்டுபடுத்துவதில் நுண்ணுயிரிகளின் பயன்பாடு பெரும் உதவியாக இருக்கிறது. சூடோமோனாஸ் மற்றும் டிரைக்கோடர்மோ நுண்ணுயிர்களை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வதால் நோய்களை கட்டுபடுத்தலாம். ஆழியார் பண்ணையில் ஒரு கிலோ 75 ரூபாயில் நுண்ணுயிரிகள் விற்பனை செய்யப்படுகிறது. இதனை விவசாயிகள் வாங்கி பயனடைய வேண்டும்," என்றார். ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் பயிர் பாதுகாப்பு விஞ்ஞானி சீனிவாசன் விவசாயிகளிடம், தொழில்நுட்ப உரையாற்றினார். பயிர்களில் பூச்சிகளின் தாக்குதலும் அவற்றை கட்டுபடுத்துவதில் உள்ள தொழிநுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொண்டு அவற்றை நடைமுறையில் செயல்படுத்த வேண்டும். பொதுவாக தென்னையில் சிவப்பு கூன் வண்டு, காண்டாமிருக வண்டு போன்றவைகள் காணப்படும். சிவப்பு கூன் வண்டு தாக்குதலினால் தென்னையில் காய்ப்பு திறன் குறையும்.

காண்டாமிருக தாக்குதலினால், பெரிதும் பாதிக்கப்படுவது இளந்தென்னைகன்றுகள் தான் இதன் அறிகுறிகள் தென்னை ஓலையில் 'வி' வடிவில் ஓலைகள் கட்டாகி காணப்படும். இதனை கட்டுப்படுத்த மோனோகுரோடோபாஸ், 10 மில்லியை, 10 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் கொடுக்க வேண்டும் என்றார்.வாணவாரயர் வேளாண்மை கல்வி நிறுவனத்தின் உதவி பேராசிரியர், யுவசெந்தில் பேசுகையில், "பயிர்களுக்கு தேவையான உயிர் உரங்களான வேம்பு, மண்புழு உரம், நன்மை செய்யும் நுண்ணுயிரிகளின் செயல்பாடுகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இதில் 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். தோட்டகலைத்துறை அலுவலர் வசுமதி மானியங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

**கோடை கால பசுந்தீவன தட்டுப்பாட்டுக்கு மாற்று தீர்வு : கால்நடை பயிற்சி மைய ஆய்வில் தகவல்**

**கோவை,**

கோடை காலங்களிலும், தண்ணீர் கிடைக்காத சூழலிலும், மாணாவாரி நிலங்களில், பயறுவகை பசுந்தீவனங்களை உற்பத்தி செய்வதற்கு, கோவையை சுற்றியுள்ள விளைநிலங்கள் ஏதுவான சூழலில் இருப்பதாக, கால்நடை பயிற்சி மையத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது.
கால்நடைகளுக்கு, கோடை காலங்களில் பசுந்தீவனங்கள் கிடைப்பது அரிது. இதுபோன்ற சமயங்களில், பிண்ணாக்கு, வைக்கோல், சோளம் போன்ற உலர் தீவனங்களையே, உணவாக கொடுக்கப்படுகிறது. இதனால், பசுந்தீவனங்களின் சத்துக்கள் கிடைக்காமல், கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது. இதற்கு மாற்று பசுந்தீவனத்தை அறிமுகப்படுத்த, கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில், கோடை காலங்களிலும், வெப்ப மிகுந்த தண்ணீரில்லா சூழலிலும், மாணாவாரி நிலங்களிலும் விளையும், பயறுவகைகளை உற்பத்தி செய்வதற்கு, கோவையை சுற்றியுள்ள விளை

நிலங்களின் மண் பரிசோதிக்கப்பட்டது. மேலும், சில மண் மாதிரிகளில் பயிரிட்டபோது, அதிகளவு மகசூல் கிடைத்துள்ளது.

மேலும், பயறு வகை தீவனங்களாக கருதப்படும் வேலி மசால், ஸ்டைலோ, அவரை, கொத்தவரை, நரிப்பயறு, கொள்ளு போன்ற ஓராண்டு மகசூல் தருபவைகளும், வெட்ட வெட்ட மகசூல் தரும் சங்குபுஷ்பம் பயறு வகை தீவனங்களும், கால்நடைகளுக்கு சிறந்த மாற்று பசுந்தீவனமாக இருக்கும் எனவும், அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. இதை, கோவையை சுற்றியுள்ள கால்நடை வளர்போர், தங்கள் நிலத்தின் தன்மைக்கேற்ப பயிரிடுவதன் மூலம், மழையில்லா வெப்ப காலங்களிலும், பசுந்தீவனங்களை உற்பத்தி செய்ய முடியும்.

கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் சிவக்குமார் கூறுகையில், "மழையில்லா வறட்சி காலங்களில், மாணாவாரி நிலங்களிலும், தண்ணீர் கிடைக்காத வெப்பமான நிலங்களிலும், பசுந்தீவனங்களை வளர செய்ய, சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், குறிப்பிட்ட ஓராண்டு மற்றும் பல்லாண்டு வரை சாகுபடிக்கு ஏற்ற பயிர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிரிட்டதில், மிகுந்த மகசூல் கிடைத்தோடு, கோவையை சுற்றியுள்ள இடங்களில், இந்த பயறுவகை தீவனங்கள் பயிரிட தகுந்தவை எனவும் கண்டறியப்பட்டது. மேலும், இந்த பயறுவகை தீவனங்களில், புரதம், சுண்ணாம்பு, மணிச்சத்து மற்றும் தாது உப்புகள் அதிகளவில் அடங்கியுள்ளதால், சத்தான தீவனமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதை, ஏப்ரல், மே போன்ற வெப்பமான மாதங்களில், விளைநிலங்களுக்கு ஏற்ப, பயிரிட்டு அதிக மகசூல் பெற முடியும். இதுகுறித்த, கூடுதல் தகவலுக்கு, 0422 266 9965 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

## காரைக்குடியில் நெல் சேமிப்பு கிடங்கு 66 ஆயிரம் டன் இருப்பு வைக்க முடிவு

**காரைக்குடி ,**

காரைக்குடி பள்ளத்தூர் - கல்லூர் செல்லும் வழியில், 30 ஏக்கரில், ரூ.4 கோடியில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக திறந்தவெளி சேமிப்பு கிடங்கு அமைக்கப்பட்டு வருகிறது. புதுவயல், பள்ளத்தூரில் அரவை மில்கள் அதிகம் உள்ளதால், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட, டெல்டா மாவட்டங்களில், விளையும் நெல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம், கொள்முதல் செய்யப்பட்டு, புதுவயல், பள்ளத்தூர் ஆலைகளில் அரைக்கப்பட்டு, அரிசியாக ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. இதற்கான திறந்தவெளி சேமிப்பு கிடங்கு, பள்ளத்தூர் கால்நடை பண்ணையின் ஹெலிகாப்டர், ஓடுதளத்தில் செயல்பட்டு வந்தது. "வாகன போக்குவரத்தால், கால்நடைகளுக்கு இடையூறாக உள்ளது,' என கால்நடை பண்ணை அதிகாரிகள் புகார் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், "குட்ஷெட்டில் வரும் நெல் மூடைகளை, இறக்க விடாமல் தடுத்து நிறுத்தி வந்தனர்.' இதையொட்டி, பள்ளத்தூர் - கல்லூர் ரோட்டில் திறந்தவெளி சேமிப்பு கிடங்குக்கு, 30 ஏக்கரில் மாற்று இடம் ஒதுக்கப்பட்டது. இதில், ரூ.4 கோடியில், நெல் வைப்பதற்கான கட்டுமான பணிகள், கடந்த டிசம்பரில் துவக்கப்பட்டது. புதிய சேமிப்பு கிடங்கில், 66 ஆயிரம் டன் நெல் மூடைகளை சேமித்து வைக்கலாம். இரண்டு அடி உயரத்திலான, 9 மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதிகாரி ஒருவர் கூறும்போது: புதிய சேமிப்பு கிடங்கு, கட்டுமான பணிகள், 90 சதவீதம் முடிவு பெற்று விட்டன. திருவாரூர் மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்படும் நெல் மூடைகள், புதிய சேமிப்பு கிடங்கில் இருப்பு வைக்கப்படுகிறது. கடந்த 2012-ல் 50 ஆயிரம் டன் நெல் வரத்து இருந்தது. கடந்த ஆண்டு, 13 ஆயிரம் டன் வந்தது. இந்த ஆண்டு, இதுவரை 7 ஆயிரம் டன்

நெல் மட்டுமே வந்துள்ளது. இனிமேலும் வரத்து இருக்கும் என எதிர்பார்க்கிறோம், என்றார்.

## மானிய விலையில் சூரியசக்தி மின் மோட்டார் அறிமுகம்: ஏப்ரலில் செயல்படுத்த வேளாண் துறை முடிவு

**திருத்தணி,**

சூரிய சக்தியில் இயங்கும் மின் மோட்டார்களை மானிய விலையில் வழங்க தமிழக அரசு முடிவு செய்ததை அடுத்து, திருவள்ளூர் மாவட்டத்தில், திட்டத்திற்கான 65 பயனாளிகளை தேர்வு செய்யும் பணியை வேளாண் துறை துவங்கி உள்ளது. மின்வெட்டை கருத்தில் கொண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டம், தற்போது, சிரிய அளவிலேயே தொடங்கப்பட்டு உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 1,32,250 விவசாயிகள் இருக்கையில், முதல் கட்டமாக, 65 விவசாயிகளுக்கு மட்டும், இந்த திட்டத்தில், மானியம் வழங்கப்பட உள்ளது.

மானியம்:

சூரியசக்தி மின்மோட்டார் அமைக்க, 4,39,950 ரூபாய் செலவாகும். இதில், 3,35,200 ரூபாயை மானியமாக அரசு வழங்கும். மீதமுள்ள, 1,04,750 ரூபாய்க்கு வரைவு காசோலையாக விவசாயிகள் கொடுக்க வேண்டும். இந்த திட்டத்திற்கான அரசாணை கடந்த 4ம் தேதி வெளியான நிலையில், வேளாண் துறை விண்ணப்பங்களை பெற துவங்கி உள்ளது.

வரைவு காசோலை:

இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "வரைவு காசோலை, கணினி பட்டா நகல், குடும்ப அட்டை நகல், புகைப்படம் ஆகியவற்றுடன் விண்ணப்பத்தை வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை விரிவாக்க உதவி இயக்குனர் ஆகிய அலுவலகங்களில் வரும், மார்ச், 30ம் தேதிக்குள் விவசாயிகள் கொடுக்க வேண்டும். நடப்பாண்டில், 65 பேருக்கு மட்டும் வழங்கப்பட உள்ளது. முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். வரும் ஏப்ரல் மாதத்திற்குள்,

விவசாயிகளுக்கு சோலார் மின்மோட்டார்கள் முழுமையாக கொடுத்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்," என்றார்.

### நாட்டுக்கோழி வளர்ப்பு; பிப்., 25ல் பயிற்சி வகுப்பு

**நாமக்கல்,**

"ஃபிப்ரவரி, 25ம் தேதி, நாட்டுக்கோழி வளர்ப்பும் மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிச்சி வகுப்பு நடக்கிறது' என, பேராசிரியர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நாமக்கல்- திருச்சி சாலையில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் உள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில், வரும், 25, மதியம், 1.30 மணிக்கு கோழிப்பண்ணையாளர்கள், வளர்ப்பவர்களின் நலன் கருதி, நாட்டுக்கோழி வளர்ப்பும் முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில், இலவச பயிற்சி நடக்கிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள கோழிப்பண்ணையாளர்கள், வளர்ப்பவர்கள், பண்ணை அமைக்க விருப்பம் உள்ள தொழில் முனைவோர் நேரிலோ அல்லது, 94432 51330, 04286 233230 போன் எண்கள் மூலமாகவோ தொடர்பு கொண்டு பெயரை முன் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ஒருவந்தூர் பி.ஏ.சி.பி.,யில் 1,000 வாழைத்தார் ஏலம்

**மோகனூர்,**

ஒருவந்தூர் பி.ஏ.சி.பி.,யில் நடந்த ஏலத்தில், 1,000 வாழைத்தார்கள், 2.47 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கீழ், மோகனூர் அடுத்த ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை, வாழைத்தார் ஏலம் நடக்கிறது.இங்கு, சுற்று வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ரஸ்தாளி, பூவன்,

மொந்தன், கற்பூறவள்ளி, பச்சநாடன் போன்ற ரகங்கள் அறுவடை செய்து, ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது.நேற்று நடந்த ஏலத்துக்கு, என்.சி.எம்.எஸ்., தலைவர் தென்னரசு தலைமை வகித்தார். ஒருவந்தூர் பஞ்சாயத்து தலைவர் வக்கீல் செல்லராஜாமணி, பி.ஏ.சி.பி., தலைவர் பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 1,000 வாழைத்தார்கள் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டது.நாமக்கல், சேலம், கரூர், திருச்சி போன்ற பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். மொத்த தார்களும், 2.47 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. அதிக பட்சமாக ஒரு வாழைத்தார், 650க்கும், குறைந்த பட்சமாக, 400 ரூபாய்க்கும் விற்பானையானது. ஏலம் முடிந்ததும், விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## கருவேல மரங்களை அகற்ற மதிப்பீடு தயார் விவசாயிகள் கூட்டத்தில் ஆர்.டி.ஓ., தகவல்

**சிவகாசி,**

""சிவகாசி தாலுகாவில் கண்மாய்களில் முளைத்துள்ள கரு வேல மரங்களை அகற்ற, மதீப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது," என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், ஆர்.டி.ஓ.,கீர்த்தி பிரியதர்ஷினி தெரிவித்தார்.விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஆர்.டி.ஓ., தலைமையில் நடந்தது. நேர்முக உதவியாளர் ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். விவசாயிகள் விவாதம்:திருவேங்கிட ராமானுஜர் (சிவகாசி விவசாயிகள் சங்க தலைவர்): திருத்தங்கல் கண்மாய்களில் கழிவுநீர் கலந்த நீரை, விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாத அளவிற்கு மாசுபட்டு வருகிறது. கண்மாய் சுற்றியுள்ள 300 கிணறுகளின் நீர் மாசுபட்டுள்ளது. குடிநீர் ஆதாரமாக விளங்கிய ஆழ்துளை குழாய்களும் மாசுபட்டுள்ளது. பெரியகுளம் கண்மாய் நீர் பிடிப்பு பகுதியான வெள்ளையாபுரம் பகுதியில் உள்ள "பிலால்' தீப்பெட்டி ஆபீசில் இருந்து, பொட்டாசியம் குளோரைடு, பொட்டாசியம் பைகார்பனேட் போன்ற வேதி கழிவுகள் ,வாய்கால் வழியாக

வெளியேறுவதால்,புல், பூண்டு கூட முளைக்காமல் போய்விடுகிறது. கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும்.

அழகர்சாமி : திருத்தங்கல் செங்குளம் கண்மாயில், கடந்து செல்ல முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுகிறது. ராமச்சந்திரராஜா(விவசாய சங்க தலைவர் ) : ராஜபாளையம் கண்மாய்க்குள் 2 ஏக்கரை ஆக்கிரமித்து விவசாயம் செய்கிறார். மற்றொருவர் 5 ஆழ்துளை குழாய் அமைத்து, நீரை உறிஞ்சி விற்பனை செய்கிறார். மற்றொருவர் கரைஓரத்தில் கடைகளை அமைத்துள்ளார்.

ஆர்.டி.ஓ.,: ஆக்கிரமிப்புகளை அகற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவசாமி (அருப்புக்கோட்டை விவசாயிகள் சங்க பொது செயலாளர்): கண்மாய்கள், வரத்து கால்வாய்கள், கரைகளில் உள்ள கருவேல மரங்களை அகற்ற வேண்டும். கோடை காலத்தில் அகற்றிவிட்டால்,விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். தனியார் நிலங்களில் உள்ள கருவேல மரங்களையும் அகற்ற வேண்டும்.

ஆர்.டி.ஓ.,:சிவகாசி தாயில்பட்டி சுப்பிரமணியபுரம் கண்மாய், பாண்டியன் கண்மாய்களில், கருவேல மரங்களை அகற்ற, மதிப்பீடு தயார் செய்து, டெண்டர் விடும் நிலையில் உள்ளது. கல்லூரி மாணவர்கள் மூலம், விழிப்புணர்வு பிரசாரம் ஏற்படுத்தப்படும். கருவேல மரங்களின் தீமைகள் பற்றி தெரிந்தும் ,விவசாயிகள் அவர்களது நிலத்தில் ஏன் வளர்க்கின்றனர். அவர்களே அற்றிடலாமே. இதற்கு அரசை எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம். இச் செயல் வேலியை பயிரை மேய்வது போல் உள்ளது.

விவசாயிகள்: விவசாயம் செய்ய வழியில்லாத ஏழை விவசாயிகள், நிலத்தை அப்படியே விட்டு விடுகின்றனர். எந்த செலவும் இல்லாமல் ,ஒருடன்னுக்கு ரூ.3500 வருவாய் கிடைக்கிறது. அதனால் கண்டு கொள்வது இல்லை.

சிவசாமி: வறட்சி நிவாரண திட்டம், மாவட்டத்திலே வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் தான் நடைமுறை படுத்தப்பட்டது. அதை அதிகாரிகள் முறையாக செயல்படுத்தாததால் பயன் இன்றிபோனது.சந்திரசேகர் (வல்லம்பட்டி விவசாயி): வல்லம்பட்டி கண்மாய் பாசன நிலங்கள், 1984ம் ஆண்டிலே நஞ்சையாக மாற்றி, அரசு, கெஜட் நோட்டீபிகேஷன் வெளியிட்டது. ஆனால் அதற்கான உத்தரவு இன்னும் வரவில்லை. புஞ்சை நிலத்தை நஞ்சையாக மாற்றி, உத்தரவு வழங்க

வேண்டும்.ராமச்சந்திரராஜா (ராஜபாளையம்): விவசாயிகள் நிலங்களுக்கு வி.ஏ.ஓ.,க்கள் நேரடியாக செல்லாமல், பயிர் ஆய்வு என, அறையில் உட்கார்ந்து கொண்டு எழுதுகின்றனர். வி.ஏ.ஓ., ஆய்வுக்கு செல்லும் விபரத்தை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர் சொக்கநாதன்புதூர் கண்மாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஆர்.டி.ஓ.,: ஊரக வளர்ச்சி துறை அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் . இவ்வாறு விவாதம் நடந்தது.

## நீர்ச்சத்து தேடி வெளியேறும் யானைகள் வனப்பகுதி சார்ந்த மக்களுக்கு எச்சரிக்கை

**தர்மபுரி,**

"தமிழக யானைகளுக்கு, நீர்ச்சத்து, கார்போஹைட்ரேட் சக்தி குறைந்து வருவதால், வனப்பகுதியை விட்டு யானைகள் வெளியேறி வருவதாகவும், வனப்பகுதி அருகே வாழை, கரும்பு பயிரிட வேண்டாம்' என, விவசாயிகளுக்கு, வன ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தமிழகம் முழுவதும், பருவமழை பொய்த்துப் போனதால், வனப்பகுதியில், கசிவு நீர் குட்டை, காட்டாறு, குளங்கள் வறண்டது. வனப்பகுதியில், வறட்சியை விரட்ட வனத்துறையினர் எடுத்த முயற்சி யாவும், உரிய நேரத்தில் கைகொடுக்காததால், உணவு, தண்ணீர் தேடி வனவிலங்குகள் அடிக்கடி வெளியேறி வருகிறது.

தமிழக வனப்பகுதிகளில், 3,900க்கும் மேற்பட்ட யானைகள் உள்ளது. நன்கு வளர்ந்த யானைகள், மூன்று டன் எடையுடன் இருக்கும். ஒரு யானை, சராசரியாக தினமும், 18 மணி நேரம் வரை சாப்பிடும். 250 கிலோ புற்கள் வரை உண்ணும். நிலத்திலேயே அதிகம் சாப்பிட கூடிய வன உயிரான யானைகளின் நிலை, தமிழகத்தில் அதளபாதாளத்தில் உள்ளது. 18 மணி நேரம் சாப்பிட்டு கொண்டே இருக்கும் யானை, இன்று முழுமையாக, ஆறு மணி நேரம் கூட சாப்பிட முடியாத

நிலைக்கு தள்ளப்பட்டதால், வனத்தை விட்டு வெளியேறி, கிராமப்பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்குள் படை எடுத்து வருகிறது.

ஓசூரில், சானமாவு காப்புக்காட்டுக்கு அருகில் உள்ள யானைகள், அதனருகே உள்ள கிராமப்பகுதியில், விவசாய நிலங்களுக்குள் புகுந்து, நாசம் செய்து வருகிறது. போதிய உணவின்மையால், கால்சியம், பொட்டாசியம் சத்து குறைந்து, எலும்பும், தோலுமாய் உள்ள யானைகள், இழந்த சத்துக்களை மீட்க, விவசாய நிலங்களுக்குள் புகுந்து நாசம் செய்வதாக, வனத்துறையினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் உணவு தேட, நாம் சொல்லி கொடுக்க தேவையில்லை. உணவு கிடைக்காத நேரங்களில், உடலில் உள்ள கொழுப்பையே, உணவாக மாற்றிக்கொள்ளும் திறன், பறவை, விலங்குகளுக்கு இயற்கையாகவே உள்ளது. உணவு கிடைக்காத போது, கொழுப்பையே உணவாக்கி, உடலில் இழந்த சக்தியை, யானைகள் மீட்டுக்கொள்ளும்.கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியில் இருந்து, இன்றளவும், வனப்பகுதி மீளாததால், வனப்பகுதி வறண்டுள்ளது. மரப்பட்டைகளிலும், காய்ந்த புற்களிலும் நீர்ச்சத்து இல்லாததால், யானைகள் தடுமாறி வருகிறது. எனவே, வனத்தை விட்டு வெளியேறும் யானைகள், கார்போஹைட்ரேட், சர்க்கரை அதிகம் உள்ள கரும்பினையும், நீர்ச்சத்து அதிகம் உள்ள வாழைகளையும் உணவாக்கி கொள்கிறது. எனவே, வனப்பகுதி மற்றும் வனம் சார்ந்த மலைப்பகுதிகளில், கரும்பு, வாழையை பயிரிடுவதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும், என்றனர்.

## நிவாரண உதவிகள்

**பந்தலூர் ,**

வனவிலங்குகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெப்பக்காடு பகுதியில் நடந்த நிகழ்ச்சியில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிகழ்ச்சியில் காப்பக

துணை இயக்குனர் சந்திரன் தலைமை வகித்தார். முதுகுழியில் யானை தாக்கி உயிரிழந்த ராதாகிருஷ்ணன் குடும்பத்திற்கு 2.75 லட்சம் ரூபாய், சிறு காயமடைந்த தேவர்சோலையை சேர்ந்த அப்பு குடும்பத்தினருக்கு 30 ஆயிரம் ரூபாய், புலி தாக்கி கால்நடைகள் பாதிக்கப்பட்டவர்கள் 12 பேருக்கு 3.9 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

## திடீர் மழையால் ஆறுதல்

**கோத்தகிரி,**

கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல், மழை பெய்ததால், விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் நடப்பாண்டு வழக்கத்தைவிட, மிக குறைந்தளவே மழை பெய்துள்ளது. தேயிலை தோட்டம் உட்பட விவசாய நிலங்களிலும் ஈரப்பதம் குறைந்து, மகசூல் வெகுவாக குறைந்து வருகிறது. இதனிடையே, நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தில் பல பகுதிகளில் சுமாரான மழை பெய்தது. கோத்தகிரி சுற்றுப்புற கிராம பகுதிகளில் இரவில் கனமழை பெய்தது. இந்த மழை போதுமானதாக இல்லை என்றாலும், தேயிலை தோட்டங்கள் ஓரளவு ஈரப்பதம் கண்டுள்ளதால், விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர். தவிர, கோத்தகிரி நகருக்கு முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் தாழ்வான பகுதியில் அமைந்துள்ள ஈளாடா தடுப்பணையில் தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. இதனால், மக்கள் ஆறுதல் அடைந்தனர்.

## விளை பொருளை உணவாக மாற்றும் நிறுவனங்கள் துவக்க... அழைப்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேளாண்மைத்துறை முடிவு

**திண்டுக்கல்,**

உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை, உணவாக மாற்றும் நிறுவனங்களை துவங்க முன்வரும் விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் உதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.தமிழகத்தில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு

புதிய திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் புதிய முயற்சிகளில் ஈடுபட விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். இதனை தவிர்ப்பதற்காக களப்பணியாளர்கள் மூலம், விவசாயிகளை நேரில் சந்தித்து குழுக்களை துவக்குவதற்கான நடவடிக்கை வேளாண்மை துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை, அதே நிலையில் விற்பனை செய்வதால் எதிர்பார்க்கும் லாபத்தை பெறமுடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.நுகர்வோருக்கு தேவைப்படும் உணவு பொருளாக மாற்றி விற்பனை செய்தால், அதிக வருவாய் ஈட்ட முடியும் என்பதால் அதற்கான நிறுவனங்களை துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.விளைபொருட்களை சிப்பம் கட்டுதல், பதப்படுத்துதல், தரம் பிரித்தல், சேமிப்பு போன்றவற்றிற்கான கொட்டகை அமைப்பதிலிருந்து குளிரூட்டப்பட்ட வேன், குடோன் அனைத்துக்கும் மானியத்துடன் கடன் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், உற்பத்தியாளர் சங்கங்கள், தனியார் தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தால், அவர்களுக்கு உதவி செய்ய வேளாண்மை துறை தயாராக உள்ளது.

## பயிர் இன்சூரன்ஸ் செய்ய விவசாயிகளுக்கு கெடு

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில், பிப்., 28 க்குள் இன்சூரன்ஸ் செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் கூறியதாவது:திண்டுக்கல் மாவட்டத்தில், நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட 11 பயிர்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. கடன்பெறும் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் வங்கிகள் மூலம் பிரிமியத்தொகை பிடித்தம் செய்யப்படும். கடன்பெறாத விவசாயிகள் அரசின் மானியத்தொகை போக, மீதத்தொகை யை பிரிமியமாக செலுத்தவேண்டும். (இன்சூரன்ஸ் தொகை ஏக்கருக்கு) வாழைக்கு ரூ.2,35,169 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.7,055 செலுத்த வேண்டும்.

உளுந்துக்கு ரூ.2,142 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.129 செலுத்தவேண்டும். பாசிபயறு ரூ.4,198 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.238 செலுத்த வேண்டும். நிலக்கடலை ரூ.35,705 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.1,239 செலுத்த வேண்டும். மக்காசோளம் ரூ.6,050 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.451 செலுத்தவேண்டும். நெல் ரூ.11,006 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.320 செலுத்த வேண்டும். எள் ரூ.4,959க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.248 செலுத்த வேண்டும். கரும்பு ரூ.64,333 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.1,827 செலுத்த வேண்டும். மிளகாய் ரூ.25,022 க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.1,148 செலுத்த வேண்டும். வெங்காயம் ரூ.28,421க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.853 செலுத்த வேண்டும். உருளைகிழங்கு ரூ.61,388க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியமாக ரூ.1,498 செலுத்த வேண்டும். விவசாயிகள் தங்களது பாஸ்போர்ட் அளவு புகைப்படம், வங்கி கணக்கு புத்தகம், சிட்டா அடங்கல் ஆகியவற்றுடன் தங்கள் சேமிப்பு கணக்கு வைத்துள்ள வங்கிகளில் பிப்., 28 க்குள் பிரிமியம் செலுத்த வேண்டும். மாவட்டத்தில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, வேளாண்மைத்துறை இணைந்து 38 இடங்களில் பிப்.,14 முதல் பிப்.,18 வரை சிறப்பு முகாம்களை நடத்த உள்ளது, என்றார்.

## விவசாயிகள் கூட்டம்

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் பிப்., 21 காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. ஜன., 24 ல் நடந்த கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்கள் மீது விவாதம் நடத்தப்படும். மனுக்கள் கொடுக்க விரும்பும் விவசாயிகள், இரண்டு நகல்களை அலுவலர்களிடம் அளிக்க வேண்டும் என, வேளாண்மைத்துறையினர் தெரிவித்துள்ளார்.

## பயிர் காப்பீடு நிவாரணம் ஏப்ரலில் வழங்க முடிவு

**திண்டுக்கல்,**

பயிர் காப்பீட்டிற்கான நிவாரணத்தை வரும் ஏப்ரலுக்குள் வழங்குவதாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், வேளாண்மை துறையினரிடம் உறுதி அளித்துள்ளன. மாவட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த முறை ஏராளமான விவசாயிகள் பயிர் காப்பீடு செய்திருந்தனர். மழை பெய்யாததால் மாவட்டத்தில் உள்ள அனைத்து விளை நிலங்களும் வறண்டன. வறட்சி மாவட்டமாக திண்டுக்கல் அறிவிக்கப்பட்டு அரசால் நிவாரண உதவி வழங்கப்பட்டது.இந்நிலையில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு அதற்கானநிவாரணத்தை பெற்றுதருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்மை துறையினர் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சி காரணமாக வரும் ஏப்ரலில் நிவாரணம் வழங்க காப்பீடு நிறுவனம் முன்வந்துள்ளது.வேளாண்மை துறையினர் கூறுகையில்,""முதல் கட்டமாக காரிப் பருவத்திற்கான பயிர் காப்பீடு நிவாரணம், விவசாயிகளுக்கு வழங்கப்படும். ராபி பருவத்திற்கான நிவாரணம் அடுத்த கட்டமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என்றனர்.

## வெள்ளைக்கழிச்சல் நோய் பரவலால் அதிர்ச்சி! நாட்டுக்கோழி வளர்ப்போர் கவலை

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வழக்கத்துக்கு மாறாக, பிப்ரவரி மாதத்தில் கடும் வெப்பக்காற்று வீசி வருவதால், நாட்டு கோழிகளை தாக்கும் வெள்ளை கழிச்சல் நோய் வேகமாக பரவி வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நாட்டு கோழி வளர்ப்பு குடிசை தொழிலாக செய்யப்படுகிறது. பிராய்லர் கோழியை விட, நாட்டுக் கோழி கறி ருசி மிகுந்ததாக உள்ளதால், நாட்டுக்கோழியை ருசிப்போரின் எண்ணிக்கையே அதிகம். கிராம புறங்களில் உள்ள வீடுகளில், கூண்டு கட்டி

வளர்த்து வரும் நாட்டு கோழிகளை, கிராம புறத்தில் உள்ளோர், அவ்வப்போது தங்கள் பகுதிகளில் கூடும் சந்தைக்கு எடுத்து சென்று, வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

வீடுகளில் வளர்க்கப்படும், நாட்டு கோழிகளுக்கு இரையாக கம்பு, கேழ்வரகு ஆகியவை கொடுக்கப்படுகிறது. நாட்டுக்கோழிகளுக்கு. நோய் எதிர்ப்பு தன்மை குறைந்து காணப்படுவதால், வெயில் காலங்களில் பலவிதமான நோய்கள் கோழிகளை தாக்குகிறது. குறிப்பாக, வெள்ளை கழிச்சல் நோய், வெப்ப காலங்களில் கோழிகளை தாக்கும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வழக்கத்துக்கு மாறாக, இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்ததில், கடும் வெப்பக்காற்று வீசி வருகிறது. இதனால், நாட்டு கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தாக்குதல் வேகமாக பரவி வருகிறது. நோய் தாக்கிய கோழிகள் முதலில் வெள்ளையாக மலம் கழிக்கும். நோய் தாக்கிய இரண்டொரு நாளில், கோழியின் எடை முற்றிலும் குறைந்து, முடிவில் இறந்துவிடும்.

நோய் தாக்குதல் காரணமாக, சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும் நாட்டுக்கோழிகளின் எண்ணிக்கை, தற்போது மிகவும் குறைந்து காணப்படுகிறது. கடந்த இரண்டு வாரத்துக்கு முன்பு, ஒரு கிலோ நாட்டு கோழி கறி, 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, சந்தைகளில் நாட்டு கோழி வரத்து குறைந்துள்ளதால், விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. நோய் தாக்கிய முதல் இரண்டு நாளில் கோழிகளுக்கு உரிய தடுப்பூசி போட்டால் மட்டுமே, கோழிகள் இறப்பதை தடுக்க முடியும்.

இதுகுறித்து, கால்நடை மருத்துவர்கள் கூறியதாவது: பொதுவாக, வெப்ப காலத்தில் நாட்டுக் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் வரும். வழக்கத்துக்கு மாறாக, இந்த ஆண்டு பிப்ரவரி கடைசி வாரத்திலேயே கடும் வெப்பம் வீசி வருகிறது. இதனால், நாட்டுக்கோழிகள் மட்டுமின்றி, கால்நடைகள் அனைத்துக்கும் பல்வேறு விதமான நோய்கள் தாக்கி வருகிறது. குறிப்பாக,

வீடுகளில் வளர்க்கப்படும், நாட்டுக்கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. நாட்டுக் கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளை கழிச்சல் நோயை முன்கூட்டியே தடுக்க, அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தில், கோழிகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். இதற்காக, அனைத்து அரசு கால்நடை மருந்தகத்திலும், இலவசமாக "ஆர்.டி.வி.கே' தடுப்பூசிகள் போட ஏற்பாடு செய்யப்பட்டு, போதிய மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே, நோய் தாக்கிய கோழிகளை, கால்நடை மருந்தகத்துக்கு எடுத்துசென்று இலவசமாக தடுப்பூசிகளை போட்டுக் கொள்ளலாம், என்றனர்.

## 1.50 லட்சம் தென்னைகள் பட்டுப் போனதாக... தேனி மாவட்ட நிர்வாகம் அரசுக்கு அனுப்பியது

**தேவதானப்பட்டி ,**

தேனி மாவட்டத்தில், 1 லட்சத்து 50 ஆயிரம் தென்னை மரங்கள், வறட்சியால் காய்ந்துள்ளதாக, மாவட்ட நிர்வாகம் அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது. கம்பம், சின்னமனூர், போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி பகுதியில் அதிகளவில் தென்னை சாகுபடி உள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக பெரியகுளம், ஆண்டிபட்டி தாலுகாவில், கடும் வறட்சி ஏற்பட்டு, கண்மாய், குளம், ஊரணிகள் வறண்டு போயுள்ளன. விவÆ◌ாய கிணறுகளிலும் நீர் வற்றி விட்டது. பெரியகுளம் தாலுகாவில், ஜி.கல்லுப்பட்டி, கெங்குவார்பட்டி, மஞ்சளார், தேவதனாப்பட்டி, அ.வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, குள்ளப்புரம் உட்பட பல கிராமங்களில், தென்னை சாகுபடி அதிகமாக இருந்தது. இக்கிராமங்களில், நடவு செய்து 2 ஆண்டுகளில் இருந்து, நீண்ட காலமாக பலன் கொடுத்துக் கொண்டிருந்த, தென்னை மரங்கள் நீரின்றி காய்ந்து வருகின்றன. இதனால், தென்னை விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். இந்நிலையில் வருவாய்த்துறை, வேளாண்மைத் துறை சார்பில்,

மாவட்டம் முழுவதும் தென்னை பாதித்த விவசாயிகள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில். 1 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் காய்ந்துள்ளதாக கண்டறியப்பட்டது. பெரியகுளம் தாலுகாவில், ஒரு லட்சம் மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நிவாரணம் பெற்று தருவதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில், தென்னை பாதிப்பு குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பபியுள்ளது.

**வைகை கரையோர கிராமங்களில் மதுரை மாநகராட்சி எச்சரிக்கை**

**தேவதானப்பட்டி,**

வைகை அணையில் இருந்து, மதுரைக்கு செல்லும் குடிநீர் வழித்தடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். குடிநீர் பைப்பை உடைத்து விவசாயத்திற்கு தண்ணீர் திருடினால், நடவடிக்கை எடுக்கப்படும், என்று மதுரை மாநகராட்சி சார்பில், கரையோர கிராமங்களில் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.
மதுரை மாநகராட்சி மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்க, வைகை அணை-பிக்கப் அணையில் இருந்து, 2 குழாய்கள் வழியாக 16 கி.மீ., தூரம் நீர் கொண்டு செல்லப்படுகிறது. பண்ணைப்பட்டி என்ற இடத்தில், 24 மணி நேரமும் சுத்திகரிப்பு செய்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மதுரைக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு தினசரி 115 மில்லியன் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வந்தது. இதற்காக வைகை அணையில் இருந்து, நாள் தோறும் 60 கன அடிநீர் திறக்கப்பட்டது. இந்நீரை ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டம், டாடா காபி, சர்க்கரை ஆலை, மதுரை குடிநீர் திட்டங்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது. தற்போது, நீர்மட்டம் குறைந்து வருவதால், அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு 40 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு செய்த பின், 80 மில்லியன் லிட்டர் நீர் மட்டும் தற்போது கிடைத்து வருகிறது. இதனால் 4 நாட்களுக்கு ஒரு முறை தற்போது மதுரை மாநகராட்சியில் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது.அணை நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. கரையோர கிராமங்களில் உள்ள விவசாயிகள், பல இடங்களில் குடிநீர் குழாய்களின் கேட்வால்வுகளை உடைத்து, குடிநீரை திருடி

விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால், குடிநீர் திட்டத்திற்கு செல்லும் நீரின் அளவு குறைந்து வருகிறது. மேலும் நீர் வழித்தடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் மதுரை மாநகராட்சி சார்பில், தேனி, மதுரை மாவட்ட கரையோர கிராமங்களில் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. அதில், நீர்வழித்தடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொள்ள வேண்டும். குடிநீர் பைப்புகளை சேதப்படுத்தினால், நடவடிக்கை எடுக்கப்படும், என்று கூறப்பட்டுள்ளது.

## சாரல் மழையால் முருங்கை பாதிப்பு

**ஆண்டிபட்டி,**

ஆண்டிபட்டி அருகே டி.சில்க்வார்பட்டி, திம்மரசநாயக்கனூர், பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், டி.புதூர், அணைக்கரைப்பட்டி, ஏத்தக்கோயில், போடிதாசன்பட்டி<, அனுப்பபட்டி, கன்னியப்பபிள்ளைபட்டி, கதிர்நரசிங்கபுரம், ராஜதானி உட்பட பல கிராமங்களில், முருங்கை சாகுபடி உள்ளது.இப்பகுதியில் விளையும் முதல் தர முருங்கை காய்கள், தரம் பிரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இரண்டாம் தர முருங்கை காய்கள் மதுரை, ஆண்டிபட்டி மார்க்கெட்டில் இருந்து, தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், கேரளாவுக்கும் அனுப்பப்படுகிறது. கடந்த சில வாரங்களாக நிலவிய சீதோஷ்ண நிலை முருங்கை மரங்களுக்கு சாதகமாக இருந்தது. இருப்பினும், நிலத்தடி நீர் வற்றியதால், முருங்கை மரங்களுக்கு தொடர்ந்து, நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் தவித்தனர். முருங்கைக்கான விலை, கிலோ ரூ.100 வரை உயர்ந்தது. விலையை கருத்தில் கொண்டு, காய்ந்து வந்த முருங்கை மரங்களை, பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து, டேங்கர் லாரிகளில் தண்ணீர் ஊற்றி பராமரித்தனர். விளைச்சல் கைகொடுத்ததால், முருங்கை விலை தற்போது கிலோ ரூ.20 வரை குறைந்துள்ளது. பல கிராமங்களில், முருங்கை மரங்கள் பூத்துக் குலுங்கி காய்பிடிக்கும் நிலையில் இருந்தன. நேற்று அதிகாலை 4 மணிக்கு, சாரல் மழை பெய்தது. தொடர்ந்து விட்டு விட்டு 4 மணி நேரம் வரை நீடித்தது. இதனால் முருங்கை மரங்களில் இருந்த பூக்கள் உதிர்ந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆண்டிபட்டி பகுதியில், வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டாலும், முருங்கை சாகுபடி கைகொடுக்கும் என்றிருந்த விவசாயிகள், சாரல் மழையால் விரக்தி அடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

மேட்டூர் அணை நீர்மட்டம் **50** அடியானது



மேட்டூர்,

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 50.80 அடியாக உள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள் ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 79 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீருக்காக வினாடிக்கு 600 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர்மட்டம் 50.80 அடி. நீர் இருப்பு 18.32 டிஎம்சி.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஜனவரி 31 வரை 8.50 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி



பூனா,

2013 அக்டோபர் 1–ந் தேதி தொடங்கிய பருவத்தில் ஜனவரி 31 வரை 8.50 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் 4.50 லட்சம் டன் மூலச்சர்க்கரையும், 4 லட்சம் டன் வெள்ளைச் சர்க்கரையும் அடங்கும். மேலும் 1.20 முதல் 2 லட்சம் டன் வரையிலான சர்க்கரை ஏற்றுமதிக்கு தயார் நிலையில் உள்ளது. இதில் பெரும்பாலும் மூலச்சர்க்கரைதான் உள்ளது. இதே காலத்தில் 8 லட்சம் டன் மூலச் சக்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் இது 10 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற ஆண்டு அக்டோபர் 1 முதல் ஜனவரி 31 வரையிலான காலத்தில் மொத்தம் 79 லட்சம் டன் சர்க்கரை விற்பனை (உள்நாடு மற்றும் ஏற்றுமதி) செய்யப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் ஜனவரி 31 நிலவரப்படி 1.17 கோடி டன் சர்க்கரை கையிருப்பு உள்ளது. இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் இத்தகவல்களை வெளியிட்டுள்ளது. சர்க்கரை உற்பத்தியில் நம்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. அதேசமயம் பயன்பாட்டில் முதலிடத்தில் உள்ளது.

**கொங்கணாபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 8 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ.2½ கோடிக்கு ஏலம்**



இடைப்பாடி,

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் வழக்கமாக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் பருத்தி வரத்து அதிகரித்துள்ளதால் நேற்று செவ்வாய்க்கிழமையும் ஏலம் நடைபெற்றது.

ஏலத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து கலந்துகொண்டார்கள். நேற்று நடந்த ஏலத்தில் 8 ஆயிரம் பருத்தி மூட்டைகள் மொத்தம் ரூ.2 கோடியே 50 லட்சத்துக்கு ஏலம் போனது. இதில் பி.டி. ரக பருத்தி மூட்டைகள் ரூ.5300 முதல் ரூ.5800–க்கு ஏலம் சென்றது. டி.சி.எச். ரக பருத்தி மூட்டைகள் ரூ.6800 முதல் ரூ.7650–க்கு ஏலம் சென்றது. ஜலகண்டாபுரத்தில் நடைபெற்ற கொப்பரை தேங்காய் ஏலத்தில் 98 மூட்டைகள் கொண்டுவரப்பட்டன. கிலோ ரூ.74 முதல் ரூ.78–க்கு ஏலம் சென்றது. மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

**நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ரூ.50 லட்சத்திற்கு ஏலம்**



ராசிபுரம், -

நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளையில் நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் 2,501 மூட்டைகள் மஞ்சள் ரூ.50 லட்சத்திற்கு ஏலம் போனது.

மஞ்சள்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் சார்பில் நாமகிரிபேட்டையில் நேற்று மஞ்சள் ஏலம் நடைபெற்றது. இதில் ஆத்தூர், முள்ளுக்குறிச்சி நாமகிரிப் பேட்டை, நாமக்கல், எருமப்பட்டி, பவுத்திரம், துறையூர், புதுப்பட்டி, பேளுக்குறிச்சி, வெள்ளக்கல்பட்டி, உள்பட பல இடங்களில் இருந்து விவசாயிகள் மஞ்சள் மூட்டை களை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதேபோல ஈரோடு, சேலம், ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி போன்ற இடங்களில் இருந்து வியாபாரிகள் மஞ்சளை ஏலம் எடுக்க வந்திருந்தனர்.

ரூ.50 லட்சத்திற்கு ஏலம்

இந்த ஏலத்திற்கு விரலி ரகம் 1,227 மூட்டைகளும், உருண்ட ரகம் 604 மூட்டைகளும், பனங் காளி ரகம் 20 மூட்டைகளும் என மொத்தம் 2,501 மூட்டை மஞ்சள் வந்திருந்தது.இதில் விரலி ரகம் குறைந்த பட்சம் ஒரு குவிண்டால் ரூ.6,689-க்கும், அதிகபட் சமாக ரூ.8,699-க்கும், உருண்ட ரகம் குறைந்தபட்சம் ரூ.6,209-

க்கும், அதிகபட் சமாக ரூ.7,299-க்கும், பனங்காளி ரகம் குறைந்த பட்சம் ரூ.11,009-க்கும், அதிக பட்சமாக ரூ.14,409-க்கும் ஏலம் போனது. மொத்தம் 2,501 மூட்டை மஞ்சள் ரூ.50 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் பருவ மழை பொய்த்து போனதால் கரும்பு பயிர்கள் கருகின**



பொம்மிடி, -

பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் பருவமழை பொய்த்து கிணறு, குட்டைகள் வறண்டு போனதால் போதிய தண்ணீர் இன்றி கரும்பு உள்பட பயிர்கள் காய்ந்து கருகின. இதனால் தர்மபுரி மாவட் டத்தை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>பயிர்கள் கருகியது</u>

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கரும்பு, நெல், மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்து வருகின்றனர். இந்த பகுதிகளில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சுமார் 75 சதவீத விவசாயிகள் நெல் உள்ளிட்ட தானிய பயிர்களும், கரும்பு மஞ்சள் உள்ளிட்ட பணப்பயிர்களும் சாகுபடி செய்யப் பட்டது. ஆனால் பருவமழை பொய்த்து போனதால் நெல் நாற்றுகள் வயல்களில் காய்ந்து போனது. ஒரு சில இடங்களில் தண்ணீர் பாசனத்தை நம்பி பயிர் செய்த நெல், கரும்பு ஆகி யவை காய்ந்து போனது. குறிப்பாக கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் சுமார் 25 சதவீத பயிர்களே தற்போது சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இந்த பயிர்களுக்கும் போதிய

தண்ணீர் வசதி இல்லாததால் காய்ந்து வருகிறது. கரும்பு, நெல், மஞ்சள், சோளம், ராகி உள்ளிட்ட பயிர்கள் பெரும்பாலான இடங்களில் தண்ணீர் இல்லாமல் காய்ந்து வருகிறது. ஒரு சில பகுதிகளில் உழவு பணி மேற்கொண்டதோடு அப்படியே தரிசு நிலங்களாகவே காணப்படுகிறது.

<u>வறட்சி மாவட்டம்</u>

இதனால் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டு இருந்த பெரும்பாலான விவசாயிகள் போதிய மழை இல்லாததால் பயிர்கள் காய்ந்து போனதால் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். காய்ந்து போன பயிர்களை கால்நடைகளுக்கு தீவன மாக பயன்படுத்த தொடங்கி உள்ளனர். பருவ மழை பொய்த்து போனதாலும், கிணறு, ஆற்று, குட்டைகள் வறண்டு போனதாலும் குடிநீருக்கு பொதுமக்கள் அவதிப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கூறுகையில், தர்மபுரி மாவட் டத்தில் பருவமழை பொய்த்து போனதால் கிணறுகள், குட்டைகளில் தண்ணீர் வற்றி விட்டது. இந்த பகுதிகளில் கடும் வறட்சி நிலவி கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து வருகிறது. இதனால் தர்மபுரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். கிணற்று பாசனத்தையும், மழையையும் நம்பி பயிர் செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

**ஈரோடு மாவட்டத்தில் வெங்காய கிடங்குகள் அமைக்க விவசாயிகளுக்கு மானியம்**



கோபிசெட்டிபாளையம்**,**

ஈரோடு மாவட்டத்தில் வெங்காய கிடங்குகள் அமைக்க விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

<u>வெங்காயம் சாகுபடி</u>

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வெங்காயத்தின் விலை கிடுகிடுவென உயர்ந்து ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரை விற்பனை ஆனது. இதனால் விவசாயிகள் வெங்காயம் சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டனர். ஈரோடு மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வெங்காயம் பயிரிடப்பட்டு உள்ளது. ஒரு ஏக்கருக்கு 5 டன் முதல் 8 டன் வரை மகசூல் கிடைக்கிறது.இந்தநிலையில் கடந்த ஒரு மாதமாக வெங்காயத்தின் விலை குறைந்தது. இதனால் விவசாயிகள் பலர் வெங்காயத்தை இருப்பு வைத்து விலை உயரும்போது விற்பனை செய்கிறார்கள்.

<u>மானியம்</u>

இவ்வாறு வெங்காயத்தை இருப்பு வைப்பதற்கு கிடங்குகள் அமைக்க விவசாயிகளுக்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. இதற்காக வேளாண்மை பொறியியல் துறை சார்பில் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.ஈரோடு, திருப்பூர், நாமக்கல், கோவை உள்பட 12 மாவட்டங்களில் வெங்காயம் கிடங்கு அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. இதன் முதற்கட்டமாக ஈரோடு மாவட்டத்தில் 4 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இதில் ஈரோட்டில் 2 விவசாயிகளுக்கும், கோபி தாலுகாவுக்கு உள்பட்ட பகுதியில் 2 விவசாயிகளுக்கும் மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

<u>அதிகாரிகள் ஆய்வு</u>

கோபி தாலுகாவில் டி.என்.பாளையம் அருகே கொங்கர்பாளையம் பகுதியில் அதிக அளவில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. வெங்காயம் ஒரு கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை குறைவான விலையில் விற்பனை ஆகிறது.கொங்கர்பாளையத்தில் விவசாயிகள் சீனிவாசன், ரவிச்சந்திரன் ஆகியோர் மானிய விலையில் வெங்காயம் கிடங்குகள் அமைத்து உள்ளனர். இந்த கிடங்குகளை கோபி வேளாண்மை பொறியியல் துறை

உதவி செயற்பொறியாளர் ஏ.கிருஷ்ணமூர்த்தி, இளநிலை பொறியாளர் என்.மரியதாஸ் ஆகியோர் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.அப்போது அதிகாரிகள் கூறியதாவது:–

ரூ.6 கோடி

தமிழ்நாடு முழுவதும் வெங்காயம் இருப்பு வைக்கும் கிடங்குகள் அமைக்க ரூ.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. இதில் முதற்கட்டமாக விவசாயிகளுக்கு ரூ.10 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.ஒரு டன் வெங்காயம் இருப்பு வைக்கும் வகையில் கிடங்கு அமைக்க ரூ.8 ஆயிரம் செலவாகிறது. இதில் தமிழக அரசு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. அதாவது ஒரு டன் வெங்காயம் இருப்பு வைக்க ரூ.4 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் இந்த ஆண்டு 4 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இதேபோல் 12 மாவட்டங்களிலும் வெங்காயம் இருப்பு வைக்கும் கிடங்குகள் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.இந்த கிடங்குகளை கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தை சேர்ந்த அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்வார்கள். அப்போது அவர்கள் எந்த அளவுகளில் வடிவமைக்கப்பட்ட கிடங்குகள் சரியாக உள்ளது என்று ஆய்வு செய்து தமிழக அரசுக்கு பரிந்துரை செய்வார்கள்.இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.

**குடிமங்கலத்தில் தெளிப்பு நீர் பாசனம் மூலம் தென்னை மரங்களை காப்பாற்ற போராடும் விவசாயிகள்**



தென்னை மரங்களுக்கு தெளிப்பு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுவதை படத்தில் காணலாம்.

குடிமங்கலம், -

உடுமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வறட்சியினால் கருகி வரும் தென்னை மரங்களை தெளிப்பு நீர் பாசனம் மூலம் காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர்.

தென்னை சாகுபடி

தமிழகத்தில் சுமார் 3½ லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதில் திருப்பூர், கோவை மாவட்டங்களில் மட்டும் சுமார் 1½ லட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. தென்னை மரம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு மழை காலங்களில் 45 லிட்டர் தண்ணீரும், குளிர்காலங்களில் 55 லிட்டர் தண்ணீரும், வெயில் காலங்களில் 65 லிட்டர் தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

உடுமலை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த காலங்களில் பி.ஏ.பி. கிணற்றுப்பாசனம் மூலம் அதிக அளவு தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டன. தென்னை மரத்திற்கு பாத்திகள் அமைத்து கிணற்று தண்ணீரை மின் மோட்டார் மூலம் பாய்ச்சி வந்தனர். அப்போது நிலத்தடி நீர்மட்டம் 200 அடிக்கு உள்ளாக இருந்தது.

தெளிப்பு நீர் பாசனம்

அதன் பிறகு கிணறுகள் வற்ற தொடங்கிய போது ஆழ்துளை கிணறுகள் அமைத்து அந்த தண்ணீரை கிணற்றில் விட்டு மின் மோட்டாரை பயன்படுத்தி தண்ணீர் பாய்ச்சி வந்தனர். நிலத்தடி நீர் மட்டம் மேலும் குறைய தொடங்கியதும் சொட்டு நீர் பாசன முறையில் விவசாயம் செய்ய தொடங்கினார்கள். சொட்டு நீர் பாசன முறையில் முதலில் குழாய் முறையை பயன்படுத்திய விவசாயிகள் காலப்போக்கில் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறினர். தற்போது தெளிப்பு நீர் பாசனம் மூலம் கருகி வரும் தென்னை மரங்களை காப்பாற்றி வருகின்றனர்.

இது குறித்து விவசாயி பரமேஸ்வரன் கூறியதாவது:-

கருகும் தென்னை மரங்கள்

குடிமங்கலம் பகுதிகளில் தென்னை விவசாயம் அதிக அளவு நடைபெற்று வருகிறது. நிரந்தர வருமானம், கூலி ஆட்கள் பற்றாக்குறை, பராமரிப்பு செலவு குறைவு போன்ற பல்வேறு காரணங்களுடன் தென்னை சாகுபடிசெய்கிறோம்.

தென்னை மரங்கள் ஒரு ஏக்கருக்கு 75 முதல் 80 வரை நடவு செய்யலாம். தென்னை மரங்கள் வைத்து பல வருடங்கள் ஆன நிலையில் தற்போது குடிமங்கலம் பகுதிகளில் தென்னை மரங்களுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் மகசூல் குறைந்தது மட்டுமின்றி கருகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 150 தேங்காய் வரை காய்க்கும் தென்னை மரங்களில் 50 காய்கள் காய்ப்பது அரிதாகி விட்டது. ஆழ்துளை கிணறுகள் 1,000 அடி ஆழம் வரை போடப்பட்டும் கிடைக்கும் நீரும் உப்பு நீராக மாறிவிட்டது. இந்த உப்பு நீரினை தென்னை மரங்களுக்கு பாய்ச்சுவதால் தென்னை மரங்களை சுற்றிலும் உப்புபடிந்து மரங்கள் பாதிக்கும் நிலை ஏற்படுகிறது.

<u>தெளிப்பு நீர் பாசனம்</u>

இதைத்தொடர்ந்து தெளிப்பு நீர் பாசன முறையை பயன்படுத்தி வருகிறோம். இந்த முறையினால் ஒரே நேரத்தில் தண்ணீர் வீணாகாமல் 4 தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. மேலும் தெளிப்பு நீர் பாசன குழாய் அமைப்பட்டுள்ளதை சுற்றிலும் உரித்த தென்னை மட்டைகள், தென்னை மரங்களின் காய்ந்த ஓலைகள், மட்டைகள், தேங்காய் தொட்டிகள் இவற்றை கொட்டி மூடாக்கு போடப்பட்டு இவற்றின் மீது இயற்கை உரங்கள் போடப்படுகிறது.

பின்னர் தெளிப்பு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதால் தென்னை மட்டைகள் தண்ணீரை உறிஞ்சிக்கொள்கின்றன. இதனால் இப்பகுதிகளில் தொடர்ந்து ஈரப்பதம் இருந்து கொண்டே இருக்கிறது. அத்துடன் தென்னை ஓலைகள், மட்டைகள் மக்கி தென்னை மரங்களுக்கு தேவையான உரங்களும் கிடைக்கிறது. இந்த முறையினால் மரங்களுக்கு அடியில் உப்பு படிவதில்லை. தென்னை மரங்களை சுற்றிலும் எப்போதும் ஈரப்பதம் இருந்து கொண்டே இருப்பதால் கருகும் நிலையில் இருந்த தென்னை மரங்கள் தற்போது மகசூல் கொடுக்க தொடங்கியுள்ளன.

தெளிப்பு நீர் பாசன முறையில் தென்னை மரத்தின் வேர்கள் 13 மீட்டர் வரை சென்று தேவையான உரத்தினை எடுத்துக்கொள்கின்றன. இந்த முறையில் 4 தென்னை மரத்திற்கு ஒரு தெளிப்பான் மட்டுமே போதுமானது.தென்னை மரத்தின் காய்ந்த ஓலைகள், மட்டைகள் இவற்றை தோப்புகளில் இருந்து அப்புறப்படுத்தாமல் தெளிப்பு நீர் பாசன பகுதிகளில் போடுவதால் இயற்கை உரம்

கிடைப்பது மட்டுமல்லாது மூடாக்கு போடப்பட்டுள்ள பகுதிகளில் இயற்கையாகவே மண்புழுக்கள் உற்பத்தியாகிறது. இதனால் மண் வளமும் பாதுகாக்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

பெரம்பலூர் மாவட்டகலெக்டர் தரேஸ் அகமது விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை காலை பெரம்பலூர் மாவட்டகலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர் பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் தங்களுடைய குறைகளை இந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தெரிவிக்கலாம். இவ்வாறு கலெக்டர் அதில் தெரிவித்துள்ளார்.

**மானிய விலை தீவனம் மூலம் 1 ½ லட்சம் கால்நடைகள் பயன்பெறும்**



தீவன கிடங்குகள் திறப்பு விழாவில் மானிய விலையில் உலர் தீவனத்தை கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங்கியபோது எடுத்த படம். அருகில் துரை.மணிவேல் எம்.எல்.ஏ. உள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் மானிய விலை தீவன திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 62 ஆயிரம் கால்நடைகள் பயன் பெறும் என்று கலெக்டர் சரவணவேல்ராஜ் கூறினார்.

தீவன கிடங்குகள் திறப்பு விழா: அரியலூர் மாவட்டம் மான்ய விலையில் உலர்தீவனம் வழங்கும் விழா மற்றும் 4 தீவன கிடங்குகள் திறப்பு விழா கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் நடைபெற்றது.அரியலூர் கால்நடை மருத்துவமனையில் மான்ய விலையில் உலர்தீவனம் வழங்கும் விழா, 4 தீவன

கிடங் குகள் திறப்பு விழா நடை பெற்றது. விழாவிற்கு கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை தாங்கினார். .துரை.மணிவேல் எம்.எல்.ஏ முன்னிலை வகித்தார்.

விழாவில் உலர் தீவன வைக்கோல் வழங்கி கலெக்டர் சரவணவேல்ராஜ கூறிய தாவது:–

தமிழக முதல்–அமைச்சர் தமிழகத்தில் இரு பருவ மழை யும் அநேக மாவட்டங்களில் பொய்த்து போன நிலையில் சிறு மற்றும் குறு விவசாயி களின் வாழ்வாதாரமான கால்நடை செல்வங்களின் தீவன பற்றாக்குறையை போக்க கால்நடை வளர்ப்போர் நலன் கருதி கால் நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் தீவன கிடங்குகளின் மூலம் வழங்கிட ரூ.12 கோடியே 50 லட்சம் முதல் கட்டமாக அனைத்து மாவட்டங்களுக் கும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

உலர் தீவன கிடங்குகள்

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை யின் மூலம் வறட்சி நிவாரண திட்டத்தில் அரியலூர், கீழப் பழுர், ஆண்டிமடம், தா.பழுர் ஆகிய 4 இடங்களில் உலர் தீவன கிடங்குகள் அமைத்திட ரூ. 40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கால் நடைகளுக்கு ஒரு கிலோ ரூ.2 வீதம் வைக்கோல் மான்ய விலையில் ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 3கிலோ வீதம் அதிகபட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை தொடர்ச்சியாக இரண்டு முதல் மூன்று மாதங் களுக்கு வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.கால்நடை வளர்ப்போர் தங்களது ரேஷன் கார்டு நகல் பாஸ்போர்ட் அளவு போட்டோ இரண்டு நகல் மற்றும் கால்நடைகளின் இருப்பு விபரம் ஆகியவற்றை அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்களுக்கு “கால்நடை தீவனம் வழங்கும் அட்டை” வழங்கப்படும். அவ் வட்டையை காண்பித்து அருகில் உள்ள தீவன கிடங்குக ளில் மான்ய விலையில் வைக் கோல் பெற்றுக் கொள்ள லாம்.அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் கால்நடை மருத்துவமனையில் அமையும் தீவன கிடங்கு மூலம் அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 37 கிராம ஊராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சியில் உள்ள கால் நடைகள் பயன்பெற உள்ளன. கீழப்பழுர் கால்நடை மருந் தக வளாகத்தில் அமையும் தீவன கிடங்கு மூலம் திருமா னூர் ஊராட்சி ஒன்றியத்தில் 36 கிராம ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள் பயன் பெற உள்ளது.ஆண்டிமடம் கால்நடை மருந்தக வளாகத்தில் அமை யும் தீவன கிடங்கு

மூலம் செந்துறை ஊராட்சி ஒன்றியத் தில் 30 கிராம ஊராட்சிகளும் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றி யத்தில் 30 கிராம ஊராட்சிகள் மற்றும் ஒரு பேரூராட்சியில் உள்ள கால்நடைகள் பயன் பெற உள்ளன.

தா.பழூர் கால்நடை மருந்தக வளாகத்தில் அமையும் தீவன கிடங்கு மூலம் ஜெயங் கொண் டம் ஊராட்சி ஒன்றியத்தில் 35. கிராம ஊராட்சிகளும் மற்றும் இரு பேரூராட்சியும் தா.பழூர் ஊராட்சி ஒன்றியத் தில் 33. கிராம ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள் பயன் பெற உள்ளன.மேற்குறிப்பிட்ட 4 தீவன கிடங்குகளும் திறந்து வைக்கப் படுகிறது. இதன் மூலம் அரியலூர் மாவட்டத்தில் உள்ள 1 லட்சத்து 62 ஆயிரத்து 461 கால்நடைகள் பயன் பெற உள்ளன .இவ்வாறு கலெக்டர் சரவணவேல்ராஜ் கூறினார்.இவ்விழாவில் இணை இயக்குநர் சந்திரசேகரன் உதவி இயக்குநர்கள் டாக்டர் .பாஸ்கர் மருதைராஜ மற்றும் கால்நடை மருத்துவர்கள் வரதராஜன் ஜெகதிசன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதி கள் கலந்து கொண்டனர்.

**தோட்டத்து கிணறுகளில் கயிறு கட்டி தண்ணீர் இரைக்கும் விவசாயிகள்**



கம்பம் பகுதியில் நெற்பயிர் களை காப்பாற்ற தோட்டத்து கிணறுகளில் கயிறு கட்டி விவசாயிகள் தண்ணீர் இரைத்து வரு கின்றனர்.

கருகும் பயிர்கள்

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட 2-ம் போக நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி கருகி வருகின்றன. முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் குறைந்து உள்ள தால் அணையில் இருந்தும் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது.கம்பம் சின்னவாய்க்கால் பரவு

பகுதியில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் அறுவடைக்கு சில நாட்கள் உள்ள நிலையில், கடைசிக் கட்ட தண்ணீர் பாய்ச்ச முடி யாமல் கருகி வருகின்றன.

இந்த வயல்வெளிகளில் நன்கு விளைச்சல் அடைந்தால் சுமார் 2 லட்சம் மூட்டை நெல் கிடைக்கும்.தற்போதைய சூழ் நிலையில் ஒரு நாளைக்கு 25 கன அடி தண்ணீர் கிடைத் தால் போதும், இங்கு கருகும் நிலையில் உள்ள நெற்பயிர் களை காப்பாற்றி விடலாம். குடி நீருக்கே போது மான அளவில் தண்ணீர் இல்லை என்பதால் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க பொதுப் பணித்துறை அதிகாரிகள் தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.

தண்ணீர் இரைப்பு

மழை வந்தால் கைகொடுக் கும் என்று விவசாயிகள் ஒருபுறம் காத்திருக்க, மறுபுறம் சில விவசாயிகள் வேறு இடங் களில் தண்ணீர் கொண்டு வந்து பயிர்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு உள்ள னர். அருகில் உள்ள ஆறு, வாய்க்கால் பகுதிகளில் இருந்து டீசல் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து நீண்ட தூரத்திற்கு குழாய்கள் மூலமாக தண்ணீர் எடுத்து வந்து நெற்பயிர்களுக்கு பாய்ச்சி வருகின்றனர். சில இடங்களில் மின்சார வசதி இல்லாததால் கிணறுகளில் கயிறு கட்டி, பழங்கால முறைப் படி தண்ணீர் இரைத்து நெற் பயிர்களுக்கு பாய்ச்சி வரு கின்றனர். கூலி ஆட்களை வைத்து தண்ணீர் இரைத்து வருகின்றனர்.

1 மணி நேரம் டீசல் என்ஜின் இயக்குவதற்கு 3 லிட்டர் டீசல் செலவு ஆகிறது. இதனால் ஒரு மணி நேரத்திற்கு சுமார் ரூ.180 செலவு செய்து தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். வழக்க மான சாகுபடி செலவோடு இந்த முறை தண்ணீர் பாய்ச்சிய செலவையும் சேர்த்து கணக் கிட்டால் விவ சாயிகளுக்கு நஷ்டம் தான் வருகிறது. இருந்தாலும் உணவுப் பொருள் உற்பத்தியை கருத்தில் கொண்டு கடன் வாங்கி பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் நிலைமைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர்.

**மின்வெளிச்சத்தை பயன்படுத்தி பூச்சிக ஒழிக்கும் விவசாயி**

பாவூர்சத்திரம்**,**

பாவூர்சத்திரம் சுரண்டை ரோட்டின் அருகில் துவரங்காடு பகுதியை சேர்ந்த முத்தையாசாமி என்பவருக்கு சொந்தமான விவசாயநிலம் உள்ளது. இந்த நிலத்தில்

கத்தரி பயிரிட்டுள்ளார். தற்போது காய்க்கும் பருவத்தில் உள்ளது. இதில் உள்ள பூக்கள் மற்றும் காய்களை சேதப்படுத்தும் பூச்சிகளை கட்டுபடுத்த பூச்சி கொல்லி மருந்துகளை தெளித்தும் பலனளிக்காமல் போய்விட்டது. இரவுநேரங்களில் பூச்சிகளை கட்டுபடுத்த ஆங்காங்கே மின்சார பல்புகளை எரியவிட்டு அருகில் ஒருகலனில் தண்ணீர் மற்றும் எண்ணெய் கலந்து வைத்துள்ளார். இதனால் இரவில் வெளிச்சம் உள்ளபகுதிக்கு வரும் பூச்சிகள், வண்டுகள் அதில் விழுந்து செத்துவிடுகின்றன. இதனால் ஓரளவு சேதம் குறைந்துள்ளதாக விவசாயி தெரிவித்தார்.